The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

Vidwan A. VADIVELAN,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXVII Nos. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF OF

THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1975 Śaka 1897

Annual Subscription Rs. 6.

Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

ADMINISTRATIVE COMMITTEE

Thiru C. RAMDAS, I. A. S.,
District Collector & President,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru D. S. ALEXANDER, M. A., B. L.,
District Judge & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru Ry. THULAJENDRA RAJA SAHEB,
Prince & Life Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru R. JAYARAMAN, B. A., B. L.,
Advocate & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Vidwan Thiru A. VADIVELAN,
Member & Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

★

The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

Vidwan A. VADIVELAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXVII Nos. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1975 Śaka 1897

Annual Subscription Rs. 6.

CONTENTS

			Pages
1.	Editorial	...	1
2.	குருக்ஷேத்திர மாலை	...	i—ii
	Title Page & Preface; Text (completed)	...	21-34
	—M. Seeralan, B A., Assistant Librarian, Sarasvati Mahal Library.		
3.	வலைவீசு புராணம்	...	1—16
	—V. Chockalingam, Vidwan, Tamil Pandit, Sarasvati Mahal Library.		
4.	தன்வந்திரி வைத்தியம் — மூன்றாம் பாகம்	...	361-372
	—Dr. S. Venkatarajan, L. I. M.		
5.	சட்டைநாதர் தோத்திரம்	...	i—ii
	Preface & Text	...	1—6
	—R. Thilagam, Pulavar, Tamil Pandit, Sarasvati Mahal Library.		
6.	பத்தியமும் அபத்தியமும் (மூன்றாம் பாகம்)	...	i—viii
	Title Page & Preface; Text (completed)	...	1-25
	—C. Rajarajesvara Sarma, Ayurveda Siromani, L. R. U., Sarasvati Mahal Library.		
7.	மோடி எழுத்து	...	1—8
	—R. Rambhavuswami, Modi Pandit, Sarasvati Mahal Library.		
8.	लक्षणराजि:	...	i—ii
	Title Page & Preface; Text (completed)	...	i—iv
	—K. E. Govindan, Siromani, Vidyā Vāridhih,	...	21-46
	Siksa Sastri, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.		
9,	सालग्राममूर्तिलक्षणम्—Text (completed)	...	17-42
	—N. K. Rāmanuja Thathachariar, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.		

10. युद्धकाण्डचम्पूः ... 9-24
—P. M. Padmanabha Sarma, Siromani,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

11. धातुरत्नावली ... 1-16
—S. Swaminatha Sastri, Siromani, Sanskrit Pandit,
Sarasvati Mahal Library.

12. श्रीपार्वतीपरिणयनिरूपण, हरिलीलानिरूपण & श्रीउमारमावादनिरूपण 1-16
—T. R. Bhima Rao, Marathi Pandit,
Sarasvati Mahal Library.

13. श्रीत्यागराजविलास (यक्षगानप्रबन्ध) ... 1-22
—N. Viswanathan, Telugu Pandit,
Sarasvati Mahal Library.

14. நூலக வார விழா ... 1

15. Gift of Manuscripts and Books ... 1

16. From Our Visitors' Book ... i–v

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXVII A. D 1975 Śaka 1897 Nos. 1, 2 & 3

EDITORIAL

We are placing before our readers Vol. XXVII of our Journal as a combined issue for the year 1974-75. The delay in publication is due to unavoidable reasons and regretted. Hereafter our future issues will be in the hands of our readers regularly.

The Tamil serial *Kurukshetra Malai* concludes with this issue. *Pathyapathyam Part III*, the medical guide book, is published in this issue. The new serial articles *Valai Veesu Puranam* an epic poem and *Dhanvantari Vaidyam Part III* will be followed up in this next issues. We hope the articles *Sattatnathar Stotram* will delight the readers. '*Modi Letters*' another important new article, will be useful to research scholars.

Our Sanskrit section offers a new series entitled *Dhatu Ratnavali*, a grammatical work. The serial articles *Lakshanarajih* and *Salagrama-murti Lakshanam* conclude with this issue. The other serial article *Dhatukosa* will be continued in the next issues also.

We present the concluding parts of the articles *Sri Parvati Parinayanirupana, Hari Leela Nirupana, Sri Uma Rama Vada Nirupana* and *Sri Thyagesa Vilasam,* an Yakshagana Prabhanda in this issue.

As usual at the end of the Journal we present the feature 'From Our Visitors' Book' our readers will come into contact and communication with the distinguished visitors, who have appreciated and enjoyed in person the treasures of wisdom preserved in the Library, as our readers do through the Journal.

We, now, take leave of our readers till we meet again through our next issue.

THANJAVUR
21—5—1975

EDITOR

குருக்ஷேத்திர மாலை

பதிப்பாசிரியர் :
தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத் துணைநூலகர்,
ம. சிராளன், B. A.,

❀

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய நிர்வாகக் குழுவுக்காக
கௌரவ காரியதரிசி,
வித்துவான் திரு. அ. வடிவேலன் அவர்களால்
வெளியிடப்பட்டது.

❀

ஸ்ரீ வாணீ விலாச அச்சகம், ஸ்ரீரங்கம்.

கி. பி. 1975] [விலை ரூ. 1-50

நூன்முகம்

குருவமிசத்தவரான பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் குருக்ஷேத்திரத்தில மகாபாரதப்போர் நிகழ்ந்ததென்பதை யாவரும் அறிவர். இப்பாரதக் கதையைத் தழுவி நூலாசிரியர் குருக்ஷேத்திரன் என்றொரு பாத்திரம் படைத்து, அவனால் விளைந்த நிகழ்ச்சியைக் கதையாக்கி நம்முன் தருகிறார். நெடும்பாடல் வகையைச் சார்ந்த இந்நூல் ஒரேவகைப் பாவால் மாலையாகத் தொடுக்கப்பட்டு 'குருக்ஷேத்திர மாலை'யாகி கற்போருக்குக் களிவிருந்தாய் அமைகின்றது.

குருக்ஷேத்திரன் என்பவன் பூசை முடித்துப் பூந்தேரில் புறப்பட்டுப் போகையில் மரகதத்தை உமிழ்கிறான். அது தவம் புரிந்துகொண்டிருந்த கண்ணன் கையில் விழுகிறது. அதனால் மாயன் சீற்றத்துக்கு ஆளாக நேரிட்டு விடுகிறது. இவ்விதிச்செயலிலிருந்து தப்புவதற்கு, சிவன், நான்முகன். எமன் ஆகியோரிடம் குருக்ஷேத்திரன் அடைக்கலம் வேண்டுகிறான். அவர்கள் காரணம் கேட்டு, அபயமளிக்க மறுத்து விடுகின்றனர். பின் வேட்டை போய் மீண்டுகொண்டிருந்த அருச்சுனனிடம் அபயம் வேண்ட, அவனும் அபயமளித்துக் காரணம் கேட்கிறான். இருவரும் தவறுக்கு வருந்துகின்றனர். மாயன் நாரதரைத் தூது அனுப்புகிறான். நாரதரும் குருக்ஷேத்திரனுக்கு அபயமளித்தல் முறையல்ல என்பதை பஞ்சவர்களுக்கு உணர்த்தி, பயனின்றி மீள்கிறார். மாயன் படைதிரட்ட உத்தரவிடுகிறார். அருச்சுனன் மனைவிகளிலொருத்தியான சுபத்திரை மாயனிடம் முறையிட்டுத் தடுக்க முயன்று அதற்காகப் பாண்டவர்களிடம் தூது போகிறாள். தூது பயனற்றதாகவே போர் மூள்கிறது. போரில் அருச்சுனன் தவிர்த்த அனைவரும் மாய்கின்றனர். பின் அருச்சுனனுக்கும் கண்ணனுக்கும் வாக்குவாதம் காரசாரமாக நிகழ்கிறது. அழியக்கூடிய உயிர் பெரிதல்ல, அபயம் கொடுத்தவனை உயிர் கொடுத்துக் காத்து அழியாப் புகழைப் பெறுவதே பெருமை என அருச்சுனன் உரைக்கிறான். மாயனும் மகிழ்ந்து காண்டீபனுகுமென்று அருச்சுனனுக்கு ஆசிகூறி மாண்டவர்களை உயிர்ப்பித்து, குருக்ஷேத்திரனையும் மன்னிப்பதாக அமைவதே இக்கதையாகும்.

நூலாசிரியர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. சுவடிகளின் ஈற்றுக் குறிப்பில் வழக்கமாகக் காணப்படும் படியெடுத்த ஆண்டு, சுவடி எழுதியவரின் பெயர்க் குறிப்பு முதலியன காணப்படவில்லை.

இந்நூலின் கண் செய்திகள் அழகாகவும், தெளிவாகவும் விரிக்கப்பட்டுள்ளன. பழமொழிகளைக் கூறும் நயம் போற்றுதற்குரியது. அவையாவன:

'வானத்திடி விழுந்தால் வைக்கோல்போர் தாங்கிடுமோ'
'கானமலை விழுந்தால் கைக்குடையோ தாங்குவது'
'எண்ணெய்க் குடத்தை எறும்புவந்து சூழ்ந்தாற்போல்'

'தண்ணீர்க் குடத்தைத் தவளைவந்து சூழ்ந்தாற்போல்'
'கார்மேகஞ் சூழ்ந்து கதிரை மறைத்தாற்போல்'
'வாடிய மானதுவும் வலையிலகப் பட்டாற்போல்' முதலியன.

கதைப்பாத்திரமாகிய குருக்ஷேத்திரனை நமக்கு விளங்குமாறு கீழ் காணும் வரிகளால் அறிமுகப்படுத்துகிறார்.

'மாறன் மகன்'
'சுந்தரியாள் தன்மகனே'
'மன்மதற்கு ஏற்றமுள்ள புத்திரன்'
'அழகு மதன்மகன்'
'வேதக் கொழுந்தெனவே விளங்கும் குருக்ஷேத்திரன்'
'ஞானமது சிறந்த நல்ல குருக்ஷேத்திரனார்'
என்றெல்லாம் கூறியுள்ளார்.

கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் வாக்குவாதம் நிகழ்கிறது. அதில் கண்ணனை வாயில்வந்தபடியெல்லாம் அருச்சுனன் திட்டிவிடுகிறான். இறைவன் எல்லாவற்றையும் கடந்தவன் என்ற பொருளை உணர்த்துவதற்காக அருச்சுனனைக் காண்டீபனுகுமென்று ஆசிகூறுவதாக அமைத்து அரிய உண்மையை அனைவருக்கும் விளக்குகிறார் இந்நூலாசிரியர். போர்க் காட்சிகள் மிகவும் தெளிவாகப் பேசப்படுகிறது.

இச்சுவடிபற்றிய சில சிறப்புச் செய்திகளையும் இவண் கூறுவது அவசியமாகும். 45 ஏடுகள் கொண்ட இச்சுவடியின் முன்னும் பின்னும் உள்ள ஏடு ஒன்றில் கண்ணனை யசோதை குழந்தைப் பருவத்தில் உரலில் கட்டிவைத்த நிகழ்ச்சியும், குளக்கரையில் கோபிமார்களின் ஆடையைக் கண்ணன் அபகரித்து அவர்களைத் திகைக்கவைத்த காட்சியும், கோபி மார்கள் அவரைக் கொண்டாடும் வகையும் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. பின்புற ஏட்டில் 13 யந்திர சக்கரங்கள் பார்த்தவர்கள் அதிசயிக்கத்தக்க வண்ணம் வரையப்பட்டுள்ளன. அக்காலத்திலேயே மிகவும் நுட்பமான கருவிகளைக் கொண்டு இந்த நுண்கலை பொறிக்கப்பட்டது என்பது ஆய்வாளர் முதல் அனைவருக்கும் விந்தையளிப்பதாகும்.

நெடும்பாடல் வகையில் அமைந்த இந்நூலை நுகருவோர் அயர்வுறா வண்ணம் சிறு தலைப்புகளும், கண்ணுற்ற பாடபேதங்களும், வேண்டிய இடங்களில் குறிப்பும் தந்து பதித்துள்ளேன். தமிழ்கூறு நல்லுலகம் துய்த்து இன்புறுவதாக. இந்நூல் வெளியிட அனுமதி வழங்கிய கௌரவ காரியதரிசி வித்துவான் திரு. அ. வடிவேலன் அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் அன்னையின் பாதங்களில் அணிவிக்கும் இச்சிறு நூலை அன்னை ஏற்று அருள்புரிவாளாக.

தஞ்சாவூர்
2—12—1974

ம. சிராவன்,
துணை நூலகர், சரசுவதி மகால் நூல் நிலையம்.

தம்பியைப்பார்த் தேதுரைப்பார் தன்மர் மனமகிழ்ந்து
வன்புறையுந் தாரானே வல்வினைகள் வந்ததென்றால்
பெருமை சிறுமையென்று பேருலகி லுண்டோதான்
தாருமென்று சொன்னாலுஞ் சாகா திருப்பார்களோ
புத்தியல்லத் தம்பியரே பேர்பெரிய அருச்சுனரே
சித்தமுடன் வாருமென்று செய்ய படைமேலே
சென்றார்கள் பஞ்சவர்கள் திருமால் படைமேலே
வந்து வளைந்தார்கள் மாயன் பெரும்படைதான்

போர்க்கோலம்

பஞ்சவர்கள் ஐவரை [1]பார்தளம் வளைக்க
வெற்றி மதயானை வீமன் தனைவளைக்க
வீமன் வெகுண்டெழுந்து வீரமுள்ள தெண்டெடுத்து
சாடினான் கிருஷ்ணபடை தன்சேனை யுள்ளதெல்லாம்
வாடி முகஞ்சோம்பி மண்மீதில் தானுருள
தலைக ளுருண்டுவிழத் தவிடு பொடியாக
அலைகள் சிதறிவிழ அழுதர்க் குடல்சரிய
மூளை சிதறிவிழ முன்கை யொடிந்துவிழ
அப்போது கிருஷ்ணப்பன் ஆனைபெருஞ் சேனையெல்லாம்
அபயம் அபயமென்று ஆயன்மேல் போய்விழுந்து
தத்தளிக்கு மவ்வளவில் தானோடி ஆள்வாரும்
வீமன்மேல் நூறுகணை விட்டா ரிலக்காக
விட்ட கணைகள்தனை விரைந்தறுத்துப் போர்வீமன்
திட்டெனவே ஆள்வார் தேர்ப்பாகன் தன்தலையை
முட்டி யடித்தான்காண் மூளை தலைசிதற
அப்போது வீமன் ஆள்வார் தனைமுடுக்கி
மெய்ப்பான கர்ஜனைகள் வீரமுடன் செய்குவனும்
ஆள்வா ரலைகுலைந்து அருண்டுமறு வில்லெடுத்து
தாழ்வாக நூறுகணை தாக்கினார் வீமர் தன்மேல்
அம்புபட்டு வீமன் அலைகடல்போ லேகுமுறி
கும்பந்த னைதொரு கும்பனுட கிருஷ்ணனையும்
சம்பந்த னைதொரு சங்கனையுந் தான்வதைத்தான்
மண்டியடித்தான் காண் மதகிரியேர் போர்வீமன்
சண்டப் பிரசண்டனெனச் சதைசதையாய் இற்றுவிழ
மன்னர்படை யத்தனையு மண்ணடுங்க விண்ணடுங்க

1 = ?

கண்ணர்படை ஆள்வார் கதறிவிழத் தானடித்தார்
ஆயருட சேனை அபயமிட்டு ஓடியதே
காயாம்பு வண்ணர்படை கலங்கி அபயமிட
அப்போது தன்மர் ஆயனைப்பார்த் தேதுரைப்பார்

பஞ்சவர் மாயரிடம் சரணடைதல்

மைப்போது மேனியனே வெல்வினையே னுன்சரத்தால்
எங்களுயி ரிறந்தா லிட்டத்த முண்டெனவே
திங்கள் முகமுடைய திருமால் முகம்நோக்கி
வரிவில் தனையெடுத்து மாயவனார் பாதமதில்
பரிவுடனே தெண்டனிட்டுப் பத்துக் கணை தொடுத்தார்
அப்போ தருச்சுனனும் அஞ்சு கணை தொடுத்தார்
விட்ட கணைகளெல்லாம் வெண்மலராய்ப் போயதுகாண்
திட்டெனவே மாயவர்தஞ் சீர்பாதம் போய்விழவே
சென்று விழுந்தகணை சேவடியைப் பூண்டுகொள்ள
மெத்த மனமகிழ்ந்து மேலான மாயவரும்
பத்தியுடன் கணையைப் பரிவாக விட்டதென்ன
குற்றமது நான் பொறுக்கக் குருக்ஷேத்தி ரன்தனையும்
உத்திரங்கள் சொல்லாம லொப்புக் கொடுப்பர்களோ
என்றுசொல்ல மாயவனார் இன்பமுள்ள பஞ்சவர்கள்
நன்றுநன்று மாயவரே நாங்க ளிறந்தாலும்
ஒப்புக் கொடுப்பதில்லை உபாயம் நினைப்பதில்லை

மாயன் பஞ்சவர்மேல் மீண்டும் போர்தொடுத்தல்

என்றவர்கள் சொல்ல வெரியெழவே கோபமுற்று
நன்றுநன்று உங்கள்வலு நாமறிய வேணுமென்று
கொன்றுவிடே னாகில் கோவிந்த னல்லக்காண்
என்று சபதமிட்டு இருவிழியுந் தான்சிவந்து
ஆல மெழுந்தாப்போல் அண்டரெண்டந் தானடுங்க
சால வரையுஞ் சரமுங் கிடுகிடென்ன
அஷ்ட கிரிக ளனைத்துங் கிடுகிடென்ன
தொட்டாரி ராமசரந் தொல்வேந்தர் தன்மேலே
விட்டகணை தன்னை விரைந்தெடுத்துப் பஞ்சவர்கள்
திட்டெனவே தங்களுட சென்னியின்மேல் வைத்தாராம்
வரிவில் தனைவளைத்து மாயவனார் பாதமதில்
பரிவுடனே தெண்டனிட்டுப் பத்துக் கணைதொடுத்தார்

அப்போ தருச்சுனரும் அஞ்சு கணை தொடுத்தார்
சேனை பலகோடி தேர்களொரு முக்கோடி
ஆனை யெழுநூறு அறுபதுலெட் சம்புரவி
பஞ்சவரை வந்து வளைந்தார் படைகளெல்லாம்
திக்குத் திசைநடுங்கச் செங்கதிரோன் தான்மறைக்க
எண்ணெய்க் குடத்தை எறும்புவந்து சூழ்ந்தாற்போல்
தண்ணீர் குடத்தை தவளைவந்து சூழ்ந்தாற்போல்
கார்மேகஞ் சூழ்ந்து கதிரை மறைத்தாற்போல்
அஞ்சாத மன்னவனுர் அனேக தளம்வளைந்தார்
மஞ்சாரும் பூங்குழலாள் மகாலெட்சுமி முதலாய்
ஆண்டர் முதலாக அய்யோ வெனவிரங்க
சண்ட முனியரெல்லாம் கண்ணீர் மிகச்சொரிய
தேவாதி தேவர்கள் திடுக்கிட் டவரேங்க
பூவேந்தர் செய்யும் புழைகேட்டைப் பாருமென்ன
மையோ டிருண்டகுழல் மாதர் மனஞ்சலிக்க
வெள்ளிமலை ஈசுபரனுர் மிகவெகுண்டு பார்த்திருக்க
தெள்ளியதோர் ஐவருட திறமையைக்கண் டேமகிழ்ந்து
இந்த அநியாயம் எவ்வுலகில் கண்டதில்லை
மண்ணுளத் தக்கதல்ல மாடைபொருள் காகவல்ல
வீம்புக்குத் தாங்கள் வினைபொருதுஞ் சேவுகர்காண்
ஆம்பிளை காளையிவர் ஆண்மையுள்ள பஞ்சவர்கள்
சொல்லுக் கிறக்கத் துணிந்தவர்க ளுண்டோதான்
பரமசிவன் தானும் பஞ்சவரை மெச்சுகின்றுர்
அரன்தான் மனமகிழ்ந்து ஐவரையும் மெச்சினர்காண்
என்றுசொல்லி மெச்சி யிமையோர் மனமகிழ்ந்து
அன்று சிவனுரும் அல்லோர் மகிழ்ந்திடவே
வந்த படைமேலே மதயானை போல்சீறி
அந்தரமுந் தானடுங்க அதர்வீமன் தானெழுந்து
தெண்டாயு தத்தாலே செவிபடத் தானடித்தான்
மிண்டமற்று வீழ்வாரும் வெங்கையற்று வீழ்வாரும்
துண்டந் துணுக்காகத் துணிபட்டு வீழ்வாரும்
ஐயோ வெனவே அலறி விழுவாரும்
மய்யரே மேனி மணவாள மாயவரே
சொல்லால் புகழ்வீமன் தோற்றமுட னே அடித்தான்
கல்லான தேர்களெல்லாங் கட்டுடைந்து போகுதய்யா
அபயம் அபயமென்று ஆயர்மேல் போய்விழுந்தார்

ஆயன் சினந்தெழுந்து ஆனதொரு வில்லெடுத்து
விட்டாரி லக்காக வீமனுட தன்மேலே
அம்புபட்டு வீமன் அலைகடல் போலேகுமுறி
வெம்பி யெழுந்திருந்து விண்ணுலகந் தானடுங்க
இருப்புத்தெண் டாயுதத்தை இதமாகத் தானெடுத்து
பொருப்புக் கரிகள்விழ போர்வேந்தர் பட்டுவிழ
மாக்கள் பலவிழ மன்னவர்கள் பட்டுவிழ
தேர்க ளொடிந்துவிழ தேர்க்கொடிக ளற்றுவிழ
அடித்தான் மதவீமன் ஆயன் பவுசையெல்லாம்
மடிந்த மனிதர்களும் மாக்கள் பலவிழ
எண்ணவொண்ணாச் சேனை இறந்து விடும்போது
அப்போது தன்மர் அஞ்சுகணை தொடுத்தார்
வில்லி அருச்சுனனு மிகவெகுண்டு மாயவர்மேல்
ஓரம்பு தான்தொடுக்க ஒருகோடி அம்பாச்சு
தொட்டா னருச்சுனனுந் துளசிமணி பூண்டவர்மேல்
மாயன் சினந்து மகாமேக வில்லெடுத்து
சென்றுருவ வாழிதொட்டார் சிறியவர்கள் பஞ்சவர்மேல்
கன்றி எழுந்திருந்து கண்ணருட தன்படைமேல்
ஓடி அடித்தான்காண் உறுதியுள்ள போர்வீமன்
மாயவனார் தன்னுடனே வந்தபடை மன்னவரும்
நாடியவர் பஞ்சவரை நாலுதிக்குந் தான்வளைந்தார்
வாடிய மானதுவும் வலையிலகப் பட்டாற்போல்
ஓடி வளைவாரு மொருமித்து நிற்பாரும்
அம்பு தொடுப்பாரும் அவரவரே வாளெடுத்து
வெம்பியவர் மேலே வெண்பூசல் செய்வாரும்
இப்படித்தான் வந்தபடை எண்பதிங்கா தமகல
செப்பமுடன் பஞ்சவர்கள் சீறி எழுந்திருந்து
சாடினான் வீமன் தவிடு பொடியாக
செங்கண்மால் தன்னுடைய தேர்ப்பாகன் பட்டுவிழ
திங்கள்முக மாயன் தேர்க ளொடிந்துவிழ
யானைக் குதிரையெல்லாம் அபயமிட்டுத் தானோட
சேனைமன்ன ரெல்லோருஞ் சீறி அபயமிட
தெண்டாயு தத்தாலே சேனைமன்னர் தான்மடிய
வண்டுறையு மார்பன் மாயன் படைமடிய
அண்டர் முனிவரெல்லாம் அதிசயித்துப் பார்த்திருந்து
கொண்டாடி விண்ணவர்கள் கோப்புடைய பஞ்சவர்கள்

இன்று இறந்தாலும் இவர்களுக்கு மோட்சமுண்டு
நன்றுநன்று பஞ்சவர்கள் நம்பாத மேஅடைவார்
என்றுரைக்கு மவ்வளவில் ஏற்றுஞ் சிலைராமர்
வந்த படைமடிய மன்னவருந் தான்மடிய
வெந்துமனம் புண்ணாகி மிகவுழன்று மாயவரும்
சந்தேக மெண்ணாமல் சண்டைசெய்தார் பஞ்சவர்கள்
வன்பொரு பஞ்சவர்கள் ஜெயித்தார் மனமகிழ்ந்து
இந்தத் திராணியினு லெனக்கெதிரி யானூர்காண்
நந்தமது தன்படையை நறுக்கிக் குவித்தனர்காண்
என்று நெடுமால்தா னேத்தபெரு மூச்செறிந்து
கன்றி மனது கண்ணிக் கடுங்கோபங் கொண்டெழுந்து
நெஞ்சி லடக்கி நெடியோன் கணைதொடுத்தான்
பஞ்சவர் மேலே பலசரங்க ளேவிவிட்டார்
வீமன் விசையன் வீரிய சகாதேவன்
காம னழகுடைய கட்டழகன் வாள்விசையன்
வாசமிகு தன்மர் வண்ணப் பரிநகுலன்
பூசல்செய்து மாயவர்மேல் போர்வாழி தான்தொடுத்தார்
நேசமுள்ள தன்மர் நெடுமால்தனை முடுகி
ஓரம்பை விட்டு ஒசந்த கொடியறுத்தார்
ஈரம்பை விட்டு [1] இடக்கியத்தைத் தானறுத்தார்
மூன்றம்பை விட்டு முனைந்தடித்தார் சாரதியை
நாலம்பை விட்டு நசிக்கிவிட்டார் தேர்தனையே
அஞ்சம்பை விட்டு ஆர்ப்பரித்தார் தருமருந்தான்
வண்ணமுள்ள மாயன் மறுதேர் குதித்தேறி
திண்ணமுள்ள தன்மர் திறமைசெய்தார் தப்பினங்காண்
கோலவரி வில்லெடுத்து கொடியதொரு நாண்பூட்ட
சாலகுண முள்ள தன்மர்கணை ஏவிவிட்டார்
விட்ட கணைகளெல்லா மிகத்துணித்து மாயவரும்
எட்டுவாய் அம்பாலே எய்தனர்காண் மாயவரும்

போரில் தருமன் மடிதல்

மட்டுறையுந் தன்மருட மார்புருவத் தைத்ததுவே
அம்புபட்டுத் தன்மர் அரனே யெனப்புலம்பி
கும்பிட்ட கையொடித்தார் கோலவழி மாயனென்று
சிவசிவா வென்று தேரின்மேல் சாய்ந்தார்காண்

---

1 இடக்கியம் = தேர்க்கொடி

தன்மர் மடிந்துவிழத் தார்வேந்த ரிந்திரரும்
பொன்மாரி பூமாரி பொழிந்தார்கள் தேவரெல்லாம்
அப்போ தருச்சுனரும் ஆனதொரு தம்பியரும்
தன்மருட மேல்புரண்டு தான்புலம்பித் தம்பியர்கள்
அண்ணர் மடிந்தபின்பு ஆயனெங்கே தப்புகிறுர்
கண்ணர் படுந்துயரங் காணவினிப் போறமென்று
வெப்பியவர் மாயவர்மேல் வெண்பூசல் செய்யலுற்ருர்
வானகமும் மண்ணு மற்றுமுள்ள கோடுகளும்
கானக மெங்குங் கணைமாரி யாய்ப்பொழிய
சிங்கங்கள் கூடித் திரண்டு பொருதாற்போல்
அங்கவர்கள் நால்வருமாய் ஆய ஞெருவனுமாய்
திங்களுஞ் சூரியனுஞ் சேர்ந்து பொருதாற்போல்
மாயமதாய் மேகம் வளைந்து சொரிந்தாற்போல்
ஆயன்மே லெங்கும் அருங்குருதி ஆருேட
தூயவர்கள் நால்வருமாய்ச் சூழ்ந்து பொருதார்கள்
மாயன்மே லப்புபட மகாமேக வில்லெடுத்து
நாணிதனைப் பூட்டயிலே நாரா யணன்மேலே
ஆணிக் கெதைபா லடித்தான் மதகரிதான்
சாரதியுந் தேருந் தவிடு பொடியாக
பாரதத்தை வெல்லும் பகாசூரன் தானடித்தான்
தேர்நசுங்க மாயன் சீக்கிரமே தான்குதித்து
வக்கிரத் தேரேறி வலுவுடைய வில்லெடுத்து
வில்லே வளைத்து வீரமுள்ள பாணம்விட்டார்
விட்டா ரிலக்காக வீமனுட தன்மேலே

வீமன் மடிதல்

பட்டான்காண் வீமன் பார்வேந்தர் கொண்டாட
நகுல சகாதேவன் நல்ல அர்ச்சுனனும்
அதிக பலம்படைத்த அண்ணுவி போனீரோ
கதிபெருகும் பாலகரைக் காட்டிக் கொடுத்தியளோ
கதிபெறவே தான்விழுந்து தான்புலம்பி யேஅழுது
விதிவசத்தை நம்மாலே வெல்லுவமோ யென்றுசொல்லி
அருமையுள்ள அண்ணர்பட்சம் நாமிருப்ப தெப்படிகாண்
செருவி லெழுந்திருந்து செங்கண்மால் தன்மேலே
கோபித்துக் கொக்கரித்துக் குலவையிட்டு வாழிதொட்டார்
ஆவிக் குறுதுணைகள் அண்ணன்மார் போனபின்பு

உன்னைவிட்டுப் போவதில்லை உலகளந்த மாயவரே
மண்ணையுண்ட மால்தனையே மண்ணையுங்க யேவுகிறோம்
என்று குலவையிட்டு இருவிழிகள் தான்சிவந்து
நன்றியுள்ள மாயவர்மேல் நல்லதொரு பாணம்விட்டார்
ஊடறுக்க வாழிதொட்டார் ஒருகோடி யம்பாக
வாட்டங் கலங்கி மனங்கலங்கி மாயவரும்
ஒட்டி மனமேங்கி உதிரக்கண் ணீர்சொரிய
கோடறுக்கு மேகங் கொடுங்கணையைத் தான்தொடுத்தார்
தொட்டா ரருச்சுனனுஞ் சூழ்ந்தவர்கள் தன்மேலே
அஷ்ட கிரியதிர அதிர்ந்து வருங்கணையை
பார்த்தன் விலக்கிவிட்டுப் பலவாழி தான்தொடுத்தான்
வெற்றி நகுலனவன் வெண்புரவி தானேறி
சுத்தி அயதளத்தைச் சூழ்ந்தறுத்து வந்தெதிர்த்து
ஆட்டிடையா நில்லுநில்லு அறிவுகெட்டப் பேரிடையா
மாட்டிடையா நில்லுஉன்னை மண்மீதி லேமடிப்பேன்
என்று குலவையிட்டு எதிர்த்து முனைகாட்டி
சாரதியைக் குத்தித் தவிடு பொடியாக்கி
வீரமுடன் தேர்தனையே விதவிதமாய்ச் சுற்றுவராம்
நகுலன் புரவியது நாலுதிக்குஞ் சூழ்ந்துவர
முன்னந்த மாக முடுகிப் புரவிவர
தேரிலிருந்த வண்ணர் திகைதெரியா மல்மயங்கி
திக்குத் திசைகள் திசைதெரியாமல் மயங்கி
கார்மேகஞ் சூழ்ந்து கண்ணை மறைத்தாற்போல்
நீர்மேக வண்ணர் நெடுமால் மனமயங்கி
தேக்கிலையில் நீர்போலத் தியங்கினார் மாயவரும்
சற்றே நினைவுவந்து தன்மயக்கந் தான்தெளிந்து
அஷ்ட கிரிபோலே அழகுவில்லைத் தான்வளைத்து
ஏற்றம் பெரியதொரு ராமபாண மெடுத்து
நாடியதோர் வெற்றி நகுலன்மே லேவிவிட்டார்

நகுலன் மடிதல்

வாடி நலகுனவன் மண்மீதி லேவிழுந்தார்
நகுலன் மடிந்துவிழ நல்ல அருச்சுனனும்
தம்பியின் மேல்விழுந்து தான்புலம்பி அருச்சுனனும்
வெம்பிச் சகாதேவன் வெகுகோபங் கொண்டெழுந்து
அண்ணாவி வில்விசையா அருச்சுனரே நீர்கேளும்
கண்ணன்மேல் நாம்நடந்து கைவலுமைப் பார்ப்பமென்று

தேரைத் திருப்பிவிட்டான் செங்கண்மால் தன்மேலே
சிங்கங் குமிறிச் சினந்தெழுந்து பாய்ந்தாற்போல்
வங்கமுள்ள மாயவனை வந்து வளைந்து கொண்டான்
அங்கங்கி லுள்ள அரசர் பயந்தோட
கொண்டல் குமுறுங் குரல்போல குலவையிட
அண்டரெல்லாம் பார்த்து அதிசயித்து நிற்கையிலே
ஆன சகாதேவன் ஆயனுட தேர்மறித்து
கோனே இனியுனைநான் கோணங்கி ஆட்டிவிப்பேன்
ஆயரே அச்சுதரே ஆட்டிடைச்சி தன்மகனே
மாயவரே உம்முடைய மாயமெல்லாம் நானறிவேன்
என்று சகாதேவன் எடுத்துரெண்டு பாணமதை
வென்றியுள்ள மாயவர்மே லிட்டான் சகாதேவன்
விட்டகணை ஆயருட மேலுருவித் தேரறுத்து
தத்துருவ ஆயன் தான்வெகுண்டு கோபமுற்று
பாய்ந்துமறு தேரேறி பரிவான வில்லெடுத்து
ஆய்ந்து ஒருகணையை அக்கினிபோ லேவிவிட்டார்
ஏவக் கணையதுதான் எங்குந் தனலாக்கி
தாவிச் சகாதேவன் தன்னுயிரைக் கொண்டிடுமாம்

சகாதேவன் மடிதல்

அப்போ சகாதேவன் அண்ணாவி யென்றுவிழ
இப்போ தருச்சுனனும் ஏங்கிவிழி நீர்சொரிந்து
ஐவருடன் பிறந்து அகதியைப்போ லாகிவிட்டேன்
பையரவம் பூண்ட பரமனரு ளப்படியோ
தெய்வக் குறைக்கினிநாம் செய்வதினி யென்னவென்று
பாய்ந்து தேரேறிப் பகபகென்னக் கண்சிவந்து
சாந்து புனுகணியுந் தனஞ்செயனுங் கோபமுற்று
கொழுந்து மலர்வீசுங் கோதை யருச்சுனரும்
எழுந்து மனம்வெகுண்டு யெரிஎழவே கோபமுற்றான்
முப்புரத்தை தானெரித்த மூர்த்தியென வேவெகுண்டு
கோப்புடைய பார்த்தன் குமரனைப்போ லேவெகுண்டான்
வெகுண்டு அருச்சுனன்தான் வேகமுற்று நிற்கையிலே
வெகுண்ட அருச்சுனற்கு விஷ்ணுவென்ன சொல்லுவராம்

மாயன் அருச்சுனனுக்குக் கூறியது

தாயகமாய் வந்தவனைத் தான்போகச் சொல்லாமல்
உன்னாலே நால்வர் உயிரிழந்து போனார்கள்

சொன்னு லறிந்திலையே தோற்றலையே அருச்சுனனே
வந்தகுரு க்ஷேத்திரனை வாளால் தனைவதைக்க
தந்திரமாய் முன்னேவிட்டுத் தாள்பணிந்தா யாமாகில்
வந்த பிழைபொறுத்து மன்னித்து நானுமுன்னை
உந்த னுயிர்பிழைத்து ஊர்போக ஏவுகிறேம்
கண்விழித்துப் பார்த்துக் கரியமால் தன்முகத்தை
வெண்மையுள்ள பார்த்தன் வெகுண்டே துரைக்கலுற்றுன்.

அருச்சுனன் மறுமொழி

ஆட்டிடையா போடா அறிவழிந்து போனியடா
மாட்டிடைய னென்று மதியழிந்து போனவனே
அன்று நவமேய்ந்து அறிவு கெட்டுப்போனவனே
வெண்ணை திருடி இடைச்சிகையில் கட்டுண்டு
அணை கயத்தி னுலே அடிபட்ட புத்தியோதான்
காச்சிய பாலுக்கு கண்ணைப் பிசைந்தழுது
பேச்சி முலையுண்ட பேய்க்குணமோ பேசுகிறீர்
குட்டிக் குடுவைகளுங் கொப்பாளப் பெட்டிகளும்
பட்டி எருதுகளைப் பார்க்கயினிப் போயிடையா
சீம்பாலைக் காய்ச்சித் திரட்டியுண்ணப் போயிடையா
மண்டலத்தோர் கூப்பிடுவார் மாடுகற போயிடையா
பாடிக்கறப்பது நீ பார்க்கலையோ பேரிடையா
ஆடிக் கறப்பதுநீ அறிந்திருப்பாய் பேரிடையா
கம்பிளியைப் போட்டு கன்ஆயக் கோலெடுத்து
அம்பலத்தில் படுக்கும் அறிவுகெட்டப் பேரிடையா
நீர்மோர்பால் கொண்டு நெடுந்தூரம் போயலைந்து
வாய்நோகக் கூவி வருமிடச்சி தன்மகனே
மோர்கொண்டு போகையிலே மொச்சடிக்குஞ் சிக்கடிக்கும்
மாரைத் திறந்தலைந்து வருமிடையன் தன்குலமே
பட்டனு மந்தரித்து பருந்துளசி மாலையிட்டு
பொட்டன்வே தப்படித்துப் போதயிரந் துண்டவனே
தப்படித்துக் கொண்டு தாதா வெனவாடி
ஒப்புடனே கூத்தாடும் உசந்தகுலத் தாதரல்லோ
தாதனுமே தேரேறி தனஞ்செயன்முன் னேயெதித்து
போதமுடன் சண்டைசெய்யப் பொறுக்குமோ தாதாநீ
இடையனுமே தேரேறி ஏற்றமுடன் வில்லெடுத்தால்
சடையணிந்த ஈசுரர்க்குஞ் சங்கரற்கு மோராதே

மன்னவற்கு முன்னரே மாட்டிடையன் தேரேறி
என்ன நினைவாலே எதிறத்தீர் காண் கோனுரே
நால்வர்தனை செய்த்தோம் நமக்கெதிரி ஆரெனவே
சால்நனை வெண்ணி தனஞ்செயனை ஏய்க்கவந்தீர்
தாதனுட கைவலுவுந் தனஞ்செயனுர் கைவலுவும்
நீதமுட னறிந்து நெடுமாலே பாருமென்றுர்
என்பிறப்பை வென்றகையை இருபிளப்பாய்த் தான்பிளந்து
உன்குலத்தை யெல்லாம் ஊடறுப்பேன் பற்குனந்தான்
எங்கெங்கு மோடி யிடையர்மனை பூந்தாலும்
அங்கெங்குந் தேடி அறுத்திடுவேன் மாயவரே
குருக்ஷேத்தி ரன்றனையே கோலமுடன் விட்டுவிட்டு
ஒருத்தனுயிர் பிழைத்து ஓடிப்போ மென்றீரே
நம்மோ டுடன்பிறந்தார் நால்வ ரிறந்தார்கள்
எந்தனுக்கு நீர்தா மிரங்கினது போதாதோ
ஓடிப் பிழைக்கிறதும் உந்தனைக்கொன் றேஉழக்கி
நாடிப் புகழ்பெறுவேன் நம்பேர் தனஞ்செயன் காண்
அண்டினவர்க் காக அடியா ரிறந்தமென்ருல்
மன்றுதனி லுள்ளவர்க்கு வார்த்தைக் கிடமலவோ
தேவ ரிசிகளுக்குந் தேவருக்கும் பேச்சல்லவோ
பூவுலகிலுள்ள வர்க்குப் புகழல்லவோ மாயவரே

அருச்சுனன் மாயன் இருவரும் போரிடல்

என்றுமன்னன் தான்சினந்து யெரியெழவே கண்சிவந்து
நன்றியுள்ள வில்லெடுத்து நாண்பூட்டி மண்டியிட்டு
இருபுறமும் நாராசம் ஏற்றகணை விட்டுவிட்டான்
பாற்கடலில் பள்ளிகொண்டார் பாரச்சிலை விடுத்தார்
இரண்டுகணை யுங்கடித்து எமலோகஞ் சேர்ந்ததுவே
கார்க்கடல்கோ பித்தாற்போல் கண்ண னருச்சுனனும்
ஐராபதக் கணையை அருச்சுனனுர் தான்விடவே
ஐராபதக் கணையை ஆயன் தடுத்துவிட்டார்
கோட்டுக் கணைவிடுத்தான் கோபாலன் தன்மேலே
கோட்டுக் கணைதனையே கோபாலன் தான்தடுத்தார்
மட்டூர்க் கணையை மாயவருந் தான்விடுத்தார்
மட்டூர்க் கணையை மன்னவனுந் தான்தடுத்தான்
வாசுகிமே கக்கணையை மாயவருந் தான்விடவே
வாசுகிமே கக்கணையை மன்னவனுந் தான் தடுத்தான்

எட்டுவாய் அம்பாலே எய்தார்காண் மாயவரும்
எட்டுவாய் அம்பை இந்திரமகன் தான்தடுத்தான்
இந்திர பாணமெடுத் தெய்துவிட்டார் மாயவரும்
இந்திர பாணமதை யிந்திரன்மகன் தான்தடுத்தான்
எரிகணையை மாய னெடுத்துமிக வேவிடவே
எரிகணையை வில்லியவன் ஏற்றமுட னேதடுத்தான்
சுடுகணையை மாயவருந் தொட்டா ரிலக்காக
சுடுகணையை வில்லியவன் தோற்றமுட னேதடுத்தான்
மூளையுறிஞ்சி யம்பை முகில்வண்ணன் தான்விடவே
மூளையுறிஞ்சி யம்பால் முகில்விசையன் தான்தடுத்தான்
உதிரங் குடிக்கியம்பை உலகளந்தான் தான்விடவே
உதிரங் குடிக்கியம்பை உள்ளறவே தான்தடுத்தான்
விச்சுளி யாஷ்த்திரத்தை விசையன்மே லேவிவிட்டார்
விச்சுளி யாஷ்த்திரத்தை விசையன் தடுத்துவிட்டான்
வருணாஸ்த் திரந்தனையே மாய னெடுத்துவிட்டார்
வருணாஸ்த் திரந்தனையே மன்னன் தடுத்துவிட்டான்
வாயுவாஸ்த் திரந்தனையே மாயவனார் ஏவிவிட்டார்
வாயுவாஸ்த் திரந்தனையே மன்னவனுந் தட்டிவிட்டான்
இடியாஸ்த் திரந்தனையே ஏவிவிட்டார் மாயவரும்
இடியாஸ்த் திரந்தனையே இருபிளப்பாய்ப் பண்ணிவிட்டான்
இராமபா ணம்விடுத்தார் நாராயண மூர்த்தி
இராமபா ணம்விலக்கி நகைத்தா னருச்சுனனும்
கத்திரி பாணமதைக் கடுகெனவே விட்டுவிட்டார்
கத்திரி பாணமதைக் கையினு லறைந்துவிட்டான்
பத்துக் கணையாலே பச்சைமால் தான்விடவே
அஞ்சு கணையாலே அருச்சுனனுந் தான்தடுத்தான்
நூறு கணையெடுத்து நொடிக்குமுன் னேவிவிட்டார்
பத்துக் கணையாலே பார்த்தன் தடுத்துவிட்டான்
ஐயாயிரங் கணையை அருச்சுனன்மே லேவிவிட்டார்
ஐநூறு கணையாலே அருச்சுனனுந் தான்தடுத்தான்
உள்ள கணைகளெல்லா மொருமித்து விட்டுவிட்டார்
உள்ள கணைகளெல்லா மொருநொடியில் தான்தடுத்தான்
சக்திவேல் கொண்டு தனஞ்செயன்மே லேவிவிட்டார்
சக்திவேல் விட்டு தனஞ்செயனுந் தான்தடுத்தான்
உருக்குக் கெதையெடுத்து உக்கிரமாய் விட்டெறிந்தார்
உருக்குக் கெதைதனையே ஓரப்பால் தான்முறித்து

ஏதுகாண் கோனாரே இளைப்பறுதி யானதுதான்
இன்னமுள்ள தெல்லாம் யெடுத்துவிடுங் கோனாரே !
மந்தை கலைந்து மாடோடிப் போகுதுகாண்
நீர்விடுத்த பாணமெல்லாம் நான்தடுத்து விட்டுவிட்டேன்
நான்விடுவேன் பாணம் நாரணரே நீர்தடுப்பீர்
என்றுசொல்ல மாயன் இருவிழியுந் தான்சிவந்து
கணைகள் பலவிடவுங் கலங்காம லின்னேரம்
அணியணியாய்த் தான்தடுத்து அடர்ந்து பொருதினியே
சக்கரத்தை ஏவுகிறேன் தடுக்கநீ வல்லாயோ
செங்கண்மால் தான்சினந்துச் செங்கையிலே சக்கரத்தை
அங்க முறவேதான் அலங்கரித்தா ரம்மானை !
எடுத்து முகம்பார்த்து ஏண்டாநீ போர்விசையா
அஞ்சலென்று வைத்திருந்த அழகு மதன்மகனை
இச்சணமே கொண்டுவந்து என்கையிலே தான்கொடுத்து
உந்தனுயிர் பிழைத்து ஓடிப் பிழையுமென்றார்.
எம்மதிக்கும் இம்மதியோ இடையன் மதியாச்சு
புடரிமதி யெனவே பெரியோரு ரைத்தமொழி
குலவித்தை வந்துமக்குக் குறுக்கிடுதோ கோனாரே !
உம்முடனே வந்த உபய தளமாண்டும்
எம்முடைய அண்ணாவி எம்பிமார் பட்டிடத்தில்
நாமு மிறந்தமென்றால் நற்கெதிக்கு மோட்சமுண்டு
உம்மைக் கெலித்தமென்றால் ஊழியுள்ள காலமட்டும்
எம்முடைய வங்கிஷத்துக் கிடறில்லைக்காண் மாயவரே
கண்ணரே வார்த்தையிது கண்டீ ரெனவுரைத்தான்.
மன்னவனு ரீதுரைக்க மாயவனார் தானறிந்து
உக்கிரமமாய்த் தானெடுத்து உலகளந்தான் சக்கரத்தை
விக்கிரமமாய்ப் பார்த்தன்மேல் விட்டாரி லக்காக
சக்கரஞ்சூழ் பூமியெல்லாந் தானெரித்துச் சக்கரமும்
வேகமுட னூடறுத்து வேந்தன்முன் னோடியதே
நாகபா சந்தனையே நமஸ்கரித்துத் தானெடுத்து
விட்டா னருச்சுனனும் விண்ணவர்கள் கொண்டாட
விட்டதொரு நாகமது மேலுலகுங் கீழுலகும்
திட்டமுட னேயெதிர்த்துச் சீறியது நாகமது
சக்கரத்தைத் தான்விரட்டித் தான்முழுங்கி னகமது
சிக்கெனவே னகமது சென்றதுவே அம்மானை !
ஆயன் தனைவிரட்ட அருண்டு கெதிகலங்கி

[1] காயாம்பு மேனியனார் கலங்கி மனந்தளர்ந்து
மாயமதாய்க் கோடு வளைத்தனர்காண் மந்திரத்தால்
நல்லதொரு மந்திரத்தால் நாகமது மீளாமல்
வில்லி யருச்சுனர்பால் மீண்டுவந்து சொல்லியதே

மாயன் மகிழ்ந்து மாண்டவர்களை உயிர்ப்பித்தல்

மைத்துனரைக் கொண்டாடி மாயவரு மன்னேரம்
மெத்த மனமகிழ்ந்து விண்ணவர்கள் கொண்டாட
கர்த்தர் மனமகிழ்ந்து காண்டீப னருகுமென்றார்
அத்தர் மனமகிழ்ந்து அமோகமென்று வாக்கருள
வித்தகமாய்ப் பார்த்தனைத்தான் மெய்யுறவே தான்தழுவி
அச்ச மறவேதான் ஐவரையுந் தானெழுப்பி
மெச்சினே முங்களைத்தான் மெத்த மனமகிழ்ந்து
வண்ணமுள்ள மாயவனார் வார்த்தை பலவுரைத்து
தன்ம ரெழுந்திருந்துத் தான்வணங்கி மாயவரை
கண்ணிலொத்தி மாயவருங் கையாற வேதழுவி
புண்ணியரே எங்களைநீர் பொன்றிவிழக் கொன்றாலும்
புண்டரீகத் தாள்பெறுவோம் பொன்னுலகத் தேயிருப்போம்
ஆண்ட குருவே அடியேங்கள் செய்தபிழை
சொன்னபிழை பொறுத்துச் சுந்தரரே காருமென்றார்.
இன்று பொறுத்தருளும் ஏற்றமுள்ள மாயவரே
நன்றுநன்று என்றே நாராயணன் மகிழ்ந்து
எங்கும் புகழ்பெறவே ஏற்றமுட னின்றநிலை
நிச்சயமா யுங்களைப்போல் நீதியுள்ளா ரில்லையென்று
மெத்த மனமகிழ்ந்து மேகவண்ணர் கொண்டாடி
வித்தகமாய் மாயன் விசையனையுங் கொண்டாடி
நிசமாக வேதான் நீடூழி வாழுமென்று
குன்றிசெறி மாயன்குரு க்ஷேத்திரனை அழையுமென்றார்
அன்றுதன்ம புத்திரரும் அப்போது தான்அழைத்தார்

மாயன் குருக்ஷேத்திரனை மன்னித்தல்

என்னபிழை பஞ்சவர்க்கா யிப்பிழையை நாம்பொறுத்தோம்
உன்னூரே போமென் றுரைத்தனர்காண் மாயவரும்
திண்ணமுடன் மாயன் தீர்க்கமுட னேதுரைப்பார்
எப்போதும் போலே இயல்பாக வாழுமென்று

1. காயாம்பு மேனியன் = விஷ்ணு.

அப்போது மாயன் அகன்றுமெல்லப் போகவென்று
எல்லோரையும் நிறுத்தி ஏகினர்காண் மாயவரும்
நல்லதொரு பஞ்சவர்கள் நன்றியுடன் காத்ததுவும்
அடைக்கலமாய்க் காத்ததுவும் அடைந்துபோர் ஜெயித்ததுவும்
சடைக்கெங்கை தானணிந்தார் தன்மனதுக் கேற்கவேதான்.

நூற்பயன்

மன்றில் படித்தவரும் வாகாகக் கேட்டவரும்
இன்று புகழ்பெற்று இனிதூழி வாழ்ந்திருப்பார்
சத்துருக்க ளன்றிச் சகலசம்பத் துண்டாவார்
புத்திரரைப் பெற்றுப் புகழ்பெறவே வாழ்ந்திருப்பார்
பச்சைமால் பாதம் பரகதியுஞ் சேருவரே
இச்சை யுடனே இனிதூழி வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றி [1] முசியாமல் வாழ்ந்திருப்பார்.

பைரவனுதசுவாமி துணையாக வேணும்.

---

1. முகியாமல் என்றுள்ளது.

தமிழ் வாழ்க

*வலைவீசு புராணம்

காப்பு

இருண்மலந் தீரநற் போத மெய்தவுந்
தருபல முத்தமிழ்ச் சாரதிப் பெண்ணும்
மருவு பேறது முற்று மருளெனக்
குருபரன் பாதமுட் கொண்டு போற்றுவாம். (1)

அரும்பைவைக் குஞ்சடை நின்மல னுரந்த வாண்பனையைக்
குரும்பைவைக் கும்படிப் பாடவல் லார்கொற்கை வேந்தன்மனம்
திரும்பவைக் குஞ்சொற் றிருஞான சம்பந்தன் செந்தமிழ்நூல்
விரும்பவைக் குங்கொடு போய்விண்ணு ளோர்க்கு மிகும்பதத்தே! (2)

வலங்கொள் சிவலிங்கம் மண்மேல்வைப் பிற்றுப்
பொலங்கொள் முடிகளிற்றைப் போற்றி — இலங்கேசன்
கற்பித்த பூசை(தனைக் காக்கின்) சிரம்வருந்தி
நிற்கப் பிறவா னிலத்து. (3)

குமாரக்கடவுளே துணை

(செருவளர் கோட்டு நீடு) செங்கைமூழ் சகத்திலேறி
உருவளர் கோட்டு வாகை யானைமா முகனை(ப் போற்றிக்)
(குருவ)ளர் கோட்டுத் தீக்கை கொண்டுல குய்யக் கொண்ட
ஒருவளர் கோட்டு வேழத் திருப்பதம் உள்ளம் வைப்பாம். (4)

ஒற்றை மருப்பு மிருபுயமும் ஒளிசேர் நயன மொருமூன்றும்
கொற்ற வலங்கற் புயநான்கும் கோலக் கரங்க ளோரைந்தும்
வெற்றி புனைந்த மதவாறும் விளங்கக் குன்றிற் பிடிவருந்தப்
பெற்ற களிற்றின் திருநாமம் பேசப் பாசப் பிறப்பறுமே! (5)

அன்றிப் பெயர்மால் வரையுருவ
வடரும் மதமா உடலுருவ
வென்றிச் சூரன் மார்புருவ
மேவு மடியார் வினையுருவ

---

* சுவடி எண். 299.

மன்றக் கடம்பன் றொடைவாகை
வடிவேல் வாங்கும் பெருமானை
இன்றிப் புராணம் நிறைவேற
விசைக்குஞ் சதங்கைப் பதம்பணிவாம். (6)

தேங்கிய கங்கை சூடுஞ் சிவனொரு படகி லேறி
வாங்கிய வுததி தன்னில் வலைவீசு புராணஞ் சொன்ன
காங்கயன் றன்னை யாளுங் காங்கேயன் கந்த சுவாமி
பாங்குடன் மகர மாய பணிவிடை போற்றி! போற்றி!! (7)

அவையடக்கம்

வெயிற்பா லெரியைப் பாவித்து
வெளிமின் மினிதான் மின்னுவபோல்
மயிற்பா லினத்தைப் பாவித்து
[1] வராக மகிழ்ந்து நடிப்பனபோல்
குயிற்பால் மொழியைப் பாவித்துக்
குடிஞை யிருந்து குழறுவபோல்
இயற்பா வலரைப் பாவித்து
யானுங் கவிதை யியம்பலுற்றேன். (8)

வாழ்த்து

வேறு

வாழ்க நாற்பத்து ளாயிர மாதவர்
வாழ்க நீறுட னேவள ராகமம்
வாழ்க வஞ்செழுத் தான மறைப்பொருள்
வாழ்க (மண்ணில்) மறையொரு நான்குமே! (9)

புராணச்சுருக்கம்

மடவாள்தன் பாகங் கொண்டு
விண்ணுமண் ணுலகு முய்ய
கடல்விட முண்ட நாதன்
கைலையி லிருந்த வாறும்,
மருள்விழி உமையாள் நங்கை
யதிசயித் தெழுந்தி ருந்து
வரியர வணிந்த நாதன்
மலரடி பணிந்த வாறும்,

1. முள்ளம் பன்றி.

பொன்புது வாடை சாந்தம்
புனையாது புனைந்த தெல்லாம்
அன்புடன் புனைந்த வாறும்,
அருள்செயு மென்ற வாறும்,
வினவிய மடவா ளுக்கு
மேனியி லணிந்த தெல்லாஞ்
சினமிகு மழுவாள் ஐயன்
தெளிவுற வுரைத்த வாறும்,
மலர்மாலை புனைந்தி டாமல்
வளம்பட நகையா நின்ற
தலைமாலை புனைந்த வண்ணம்
சாற்றுமென் றுரைத்த வாறும்,
மருக்கமழ் குழலா ளுக்கு
மாலையன் சென்னி மாலை
கருத்துடன் சாற்ற வேண்டுங்
(காரணங்) கூறு மாறும்,
திருத்தகு மிருவர் மாளத்
தேவரீ ரிலைய மன்றி
யிருக்குமப் பெருமை தன்னை
யியம்பிடு மென்ற வாறும்,
அப்பொரு ளுரைக்குங் காலை
யலைகடல் வடவைக் குள்ளே
அப்புட னிருந்து ரைக்க
வேண்டுமென் றுரைத்த வாறும்,
வடவையி லிருந்து கோச
ஞானநல் வசனந் தன்னைச்
சடையர னெழுதி மங்கை
தன்கையில் கொடுத்த வாறும்,
அறுமுகக் கடவுள் கோ(ல)
அறுபத மாகி யம்மை
செறிமலர்க் குழலின் மீது
திருந்தக்கேட் டிருந்த வாறும்,
அகிலமா மடந்தை கூந்தல்
அறுமுக வண்டை நோக்கி
(ம)கரமாய்த் திரிநீ யென்று
வுள்ளலார் முனிந்த வாறும்,

தெரிவைதான் அரனை நோக்கிச்
(சிவசத்தி) யெனுமி ரண்டிற்
பெருமைதா னுடைய தேது
பேசுமென் றுரைத்த வாறும்,
சித்த(மு மகிழ்ந்)து சத்தி !
சிவப்பெரி தென்னக் கேட்டு
சத்திதா னுதை லாலே
தையல்கோ பித்த வாறும்,
மலைமகள் செங்கை கோசம்
வாங்கிவா ருதியிற் போடக்
கொலைபுனை மகர மந்தக்
கோசத்தை விழுங்கு மாறும்,
வள்ளலார் முனிந்து மங்கை
பரதவன் றனக்கு நீபோய்ப்
பிள்ளையாய்ப் பிறக்க வென்று
பேதையைச் சபித்த வாறும்,[1]
உமையொரு குழவி யாக
உததியில் மிதந்து செல்லச்
சமரவேல் மகர ராசன்
றுயர்பின் சென்ற வாறும்,
பழுதிலாத் தவஞ்செய் கின்ற
பரதவர் பெருமா னந்தக்
குழவியை எடுத்து வீட்டில்
கொண்டுபோய் வளர்த்த வாறும்,
மகரமத் துறையிற் ரேன்றி
வலைபட விறக்கா வண்ணம்
சிகரமா மேரு வென்னச்
செருச்செய்து திரிந்த வாறும்,
பரதவர் மகரந் தன்னைப்
படுத்தவர்க் கியான்ப யந்த
கோதையை வதுவை செய்து
கொடுப்பனென் றுரைத்த வாறும்,
அணிமலர் சடையார் வேடம்
சாற்றியம் புவிமேல் வந்து
மணிவலை வீசி யந்த
மகரத்தைப் பிடித்த வாறும்,

---

1. இதன்பின் 'தெரிவைதா னரனை நோக்க' என்ற வரி மிகையாயுளது.

மறியுலாங் கரத்தா ரந்த
மங்கையை மணந்த வாறும்,
அறிவிலாச் சிறியேன் நாயேன்
அறிந்தவா றியம்ப லுற்றேன். (10)

வேறு

கலைவீசும் சிறுபிறையும் கடுக்கையுநுண் டுளையெயிற்றுக்
கொலைவீசும் விடவரவும் கொக்கிறகு மொளிவீச
அலைவீசும் புனற்சடையார் அலைகடலிற் படவேறி
வலைவீசு திருக்கதையை மண்மீது வகுத்துரைப்பாம். (11)

வேறு

உரகமும் மதியுஞ் சூடும்
ஒருவர்தம் பாகங் கொண்ட
மரகத மணைய மேனி
மலைமக ளுமையாள் நங்கை
கரதரு வேன்வ ழங்கிக்
கடலர சாளு மன்றிப்
பரதவர் மரபில் வந்த
பரிசுநா னியம்ப லுற்றேன். (12)

செந்தமிழ் நாட்டுச் சிறப்பு

வேறு

இமைய மயிலுமை யம்மை
எமையா ளுடையா ரிடப்பாகஞ்
சமைய முதலாய் நின்ற
சத்துவத் தத்துவா தீதத்
திருந்திய செஞ்சடை முடியார்
திருமார் புவடு வாகப்
பெருந்தவஞ் செய்மடப் பாவை
பிறைநா றுஞ்சீ ரடிமான்
முன்னொரு கைக்கரி முகனை
யீன்ற முகிழ்முலைப் பூவைப்
பன்னிரு கைப்பெரு மானைப்
பயின்றெடுத் தபசுங் கிள்ளை. (13)

வேறு

தேவையிது வென்றுன்னிச் சிவசத்தி யாய்நின்று
மூவுலகு மீன்றென்றும் முதிரா முலைப்பூவைத்
தீயுமாய்ப் புனலுமாய்ச் செகமான ஒருவர்க்குத்
தாயுமாம் மகளுமாம் தாரமுமாம் தனியன்னம்
நிறம்பவளத் தார்சடையார் [1]நெல்லிருநா ழிகையுங்கொண்
டறமற்ற சூடகக்கை பாடகக்கா லாரணங்கு
உறவினுடன் தமையிழந்து கருகுமன்பர் [2]அறியாத
மறிவுடன் வந்தூறு மானந்தப் பெருவெள்ளம்
மஞ்சுபுனலுடன் கருவியடைய மறந்தவர் விழிநீர்
மஞ்சனமாகக் குளித்து மணமருந்து மாலைமருந்து
விரையொலிநீர் திரையடைந்து விண்ணும் மண்ணும்
பரந்தெழுநாள் பரமனுடன் தோணி தனிலினி
திருந்த மங்கை மாநகரி சூழ்ந்த
செந்தமிழ் நாடுதனிற் சிறப்புநா னியம்பலுற்றேன். (14)

வேறு

வாளை யுகளத் [3]தடம்பொலிய
வளர்தாள் பூக மடல்வீழ்ந்து
பாளை யலையத் தடத்தின்மலர்ப்
பங்கே ருகத்தின் சொரியரும்பு
வேளை [4]நிகர்க்குங் குலமறையோர்
வேள்விச் சடங்கின் வியந்தளிப்ப
காள விழியா ரேந்துபொரி
மானுங் கவல்செந் தமிழ்நாடு. (15)

வேறு

புயல்தழுவுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
குயிலினமும் பல்லவப்பூங் கொம்பினமுங் கொலைக்கமுகும்
வண்டினங்க ளொருநான்கும் மலர்க்கழுநீ ரோடைகளும்
கண்டலும்பொற் கேதகையும் கலாபமட மயிலினமும்
சென்னலுங்கம் புள்ளினமும் செங்கால்வெண் குருகினமும்
கன்னலும்பைங் கதலிகளும் கயலினமும் வராலினமும்
சாதமும் போதகமும் தத்தையுமென் பூவைகளும்

1. ‘வையற்ற நெல்’ என்றுளது. 2. ‘அறியாதவ’ என்றுளது.
3. ‘தடம் பொலின’ என்றுளது. 4. ‘நிகழுங’ என்றுளது.

[1] யோதிபமும் போதகையும் உழவருழத் தியரிருப்பும்
மள்ளரேர்ப் பாட்டொலியும் மத்தொலியுந் திரையொலியும்
கள்ளவிழிக் கடைசியர்கள் கழனி(நடு) பாட்டொலியும்
உடைந்தடைக்கும் புனலொலியும் உடைப்படைக்குந் திரளொலியும்
தடந்துறையில் புனலாடுந் தளரியலார் வளையொலியும்
கரதலங்கள் குவியவிரு கண்ணில்வந்து புனல்ததும்ப
அரகரவென் றடியவர்கள் அரற்றுகின்ற திருவொலியும்
செங்கனகக் கிரியிலியல் சேலெழுதுந் தென்னவர்க்குச்
சங்குமுத்துப் பரதவர்கள் குளிக்கின்ற தனியொலியும்
மாறனியற் றென்னவர்கோன் வந்துசிங்கா தனத்திருப்பக்
கூறைபுனை நதரனூர்தாம் குதிரையிடும் பேரொலியும்
ஆறணியுஞ் சடைமுடியார் ஆகமெங்குந் தழும்பாக
மாறன்முனிந் தடிப்பிக்க மண்சுமந்த மாநதியும் [2]
வணிச்சுற்ற பரனூர்தாம் வளைகூறும் பேரொலியும்
பணிச்சுத்தப் பாணனுக்குப் பலகையிடுந் திருவொலியும்
நெருங்கிளநீர் தாழைகளும் நிலவுலவுஞ் செண்பகமும்
மருங்குவளர் பூஞ்செருந்தும் மாலதியும் பாதிரியும்
பிச்சிமுல்லை குருக்கத்தி பிறங்கலரி செவ்வந்தி
பச்சைக் கொழுந்திருவே பட்டிகைமட் டார்வகுளம்
மாதளைதா தளைகொன்றை மந்தாரம் [3] சிந்தூரம்
போதவிழ்மல் லிகைகாந்தம் புன்னைவன்னி குன்ருத்தி
கருமுகைநந் தியாவட்டம் காகணமும் கூவிளமும்
மருவுமலர்க் (கரந்தைதும்பை) மலர்க்குறிஞ்சி யிருவாச்சி
கொட்டை நறுந்தரக்கி கொங்குசிறு செண்பகமும்
பட்டலரிக் கட்டவிழ்ந்து பரந்தெழுநந் தாவனமும்
சலஞ்சலமும் வலம்புரியும் சங்கினமுந் தாராவும்
துலங்குமுகில் மீனனென்னச் சோலையிற்பாய் வாளைகளும்
கடல்முத்த மொருமூன்றும் கண்படைத்த கழைமுத்தும்
தடவெற்பில் வேய்முத்தும் தான்பொருந்த மாநதியும்
தேனிதழி யும்பிறையும் சினவரவும் வெள்ளெருக்கும்
(ஆனி)பங்க னுக்குருகி மண்சுமந்த (மாமுடியும்)
பாய்புனலும் பருவெப்பும் பஞ்சவன மேலிக்கூறுந்
தீயுமியற் றமிழறியுந் தென்மதுரை மாநகரும்
இருவாசை கேட்டுகி யியற்றமிழுக் கியல்பாகப்

1. 'யோதிமமும்' எனல் பொருந்தும்.
2. இத்துடன் 'மாறுபடுந திருவொலியும்' என்ற சீர்கள் மிகையாயுள.
3. 'சித்தாரம்' என்றுளது.

பரிவுடன்கை மாப்பளிக்குப் பலகையிடும் முனிவெற்பும்
வேதஞ்செந் தமிழ்செய்த மெய்ப்புலவன் திருநகரும்
மாதுபங்க னுக்குருகும் வாசகப்பா வலன்பதியும்
ஆதிதிரு விளையாட்டங் கறுபதுட னொருநான்கும்
சோதிமணிக் கோபுரமும் தோரணமும் வாரணமும்
மாளிகையு மாடரங்கும் மண்டபமும் போதிகையும்
சூளிகையுந் தெற்றிகளும் துலங்குமணிச் சாளரமும்
ஆதுலரைக் கைகாட்டி அழைப்பவர்போற் றிசையெங்கும்
தீதகல நின்றசைசெம் பொன்னெடுந்து கிற்கொடியும்
மயிலென்ன கிளியென்ன மானென்னத் தேனென்ன
குயிலென்ன மொழிபடைத்த கொங்கைமட மங்கையரும்
செஞ்சடையோ னின்றுடுந் திருவெள்ளி யம்பலமும்
[1] பஞ்சாமுதங் கானென்று பைந்தென்றற் சீறுதொறும்
மறைநான்குங் குலநான்கும் வண்டமிழ்நூல் ஒருமூன்றும்
அறநாலெட் டதுவளர்த்த அம்மைதிருப் பிறந்தகமும்
இறைநின்று சேவிப்ப இருந்தசங்கப் புலவர்களும்
மறையவர்கள் வேள்விகளும் மாடகையா ழிசையொலியும்
பாட்டொலியுங் கூத்தொலியுங் பணிமொழியார் சிலம்பொலியும்
நாட்டமொரு மூன்றுடையார் நகர்வலஞ்செய் விழவொலியும்
பத்தர்களுஞ் சித்தர்களும் படர்சடைமா முனிவர்களும்
மெய்த்தவரும் ஞானிகளும் யோகிகளும் வெண்ணீறும்
தவநெறியும் எட்டெழுத்தும் சத்தியமும் அஞ்செழுத்தும்
சிவநெறியும் சிறந்தோங்குந் திருநாடு தமிழ்நாடு. (16)

வேறு

துளைவெயி லிசையெழு மடமாதர் மொழிநாடு
சுழல்தோகை நடமாட வழிபாடு திருநாடு
விளையாடல் இயல்மாலை இளையோர்கள் புனைநாடு
விரிவேணி யிறைநாளும் இயல்நாடர் புரிநாடு
களையாத வெழில்நீல மொடுபானல் களைநாடு
காவிரம் அகிலாரம் மகிழ்வேரி கமழ்நாடு
வளைவீசு திரைநீடு கடலூடு படவேறி
(ம)றைதேடு மிருபாதர் வலைவீசு திருநாடு. (17)

---

1. இச்சீர் தெளிவிலது.

வேறு

பண்பயில் நீல வண்டுகள் வாச
அம்புய மீது கண்டுயில் நாடு
பைம்பொழில் மீது வெண்குயில் கூவ
அஞ்சுக மூடு கொஞ்சி(டு) நாடு
வெண்பிறை மேவு செஞ்சடை நாதர்
தண்டமி ழாய நின்றிடு நாடு
வென்றிவில் மாறன் முன்சடை யீசர்
வெப்பரி யேறி வந்திடு நாடு
வண்புய லூடு சென்றிடு வேவை
வஞ்சியர் தோள்கள் வென்றிடு நாடு
வண்டணி யோதி மங்கையர் போல
வண்டின ஓதி மம்பயில் நாடு
செண்பக ஞாழல் சந்தகில் தாழை
திண்குலை வாழை நின்(ற)சை நாடு
செஞ்சிலை மான ஐங்கணை மாதர்
கொண்டுரு வாகி வந்தருள் நாடு (18)

பெண்புனை பாகர் மண்கவர் கூடை
(பண்பொடு கொண்டு வந்தருள் நாடு.)
(பண்ணவர் வாழ்த்தும் பெண்மணி வந்தி
புண்ணியம் செய்து போற்றிடும் நாடு.)
தண்கமு கூடு சென்றுகள் வாளை
தங்கிய பாளை கொண்டெழு நாடு
(திண்குலை வாழை நண்ணிய வேளை
வெம்பசி யாற்றத் தாழ்ந்திடு நாடு)
(பண்ணவன் பாண பத்திரர்க் காக
விறகொடு வந்து வென்றவர் நாடு)
பின்புமவ் வீசர் அன்பின ரேவு
தந்திரி யாகி வந்தருள் நாடு.
(செண்பக மாறன் சந்தகி லாரன்
செந்தமிழ் தேர்ந்த சிந்தைகொள் நாடு)
சம்புவின் மேனி புண்படு மாறு
கண்டவர் நாடு! செந்தமிழ் நாடு!! (19)

வேறு

மஞ்சுறத் தவழ்சோலை மண்டபத் தினில்நாளும்
வண்டுகைத்த சொல்மாதர் செஞ்சொல்கற் றிடுநாடு
மந்தரப் புயமார னின்பமுற் றரசாள
மந்தமுத் தசைதேர்வில் பனித்தருள் நாடு
வெஞ்சினக் கொலையானை குன்றுப் பெறவாளி
யொன்றுவிட் டுமைபாகர் நின்றமெய்த் திருநாடு
விஞ்சவெற் பனலான குங்குமக் கனமாதர்
மைந்தரைக் குழல்மாலை கொண்டுகட் டிடுநாடு
செஞ்சிறைச் செறிநீல வண்டுகைக் கிளையோடு
தெனதெனத் தெனதான வென்றிசைத் திடுநாடு
தென்றலுற் றசைபாளை சிந்திடக் கமுகூடு
சென்றிடக் கயல்தாவு செந்தமிழ் நாடு[1] (20)

வேறு

சக்கர பாணி யத்தன்முன் வேத
மெய்த்தமி ழாய வித்திடு நாடு
சச்சரி வீணை கைக்கிளை தாளம்
மத்தரி ஓசை மிக்கெழு நாடு
பைக்கொலை யாரம் மெய்க்கணி யீசர்
சித்திர சாரி ஒத்திடு நாடு
பத்தச மாற னற்குர வார
மெய்க்கணி பூத மொய்த்தெழு நாடு
மைக்கயல் மாதர் பொய்க்குமெய் யான
மற்புய மாதர் விற்பயில் நாடு
வட்டம வேலை யிற்புனல் பாரில்
வற்றிட வேலை யிட்டவர் நாடு
பொய்க்குலை வாழை முற்றிய கோல
நற்றுளிர் தாள மொத்தசை நாடு
முக்கணு லாவு முத்தமும் வேலை
முத்தமும் மேவு முத்தமிழ் நாடு! (21)

வெண்பா

இந்து புனைந்த சடையோ னிடப்பா(க)ம்
வந்து பிறந்த வளநாடே - செந்தமிழ்நூல்

1. இப்பாடலில் 3 அடிகளே உள்ளன. ஓரடி இல்லை.

வல்லா னதியரையன் வாய்த்தவியற் பாவலற்கு
நல்லான் பரதவர்கோன் நாடு (22)

வண்டிணியுங் கூந்தல் மரகதப்பங் கானதொரு
தண்டரளம் வாங்குந் தமிழ்நாடே - எண்டிசையோ
ரோதும் புகழா னுததி யரசாளும்
நாதன் பரதவர்கோன் நாடு. (23)

விருத்தம்

குன்றி லசையுங் கழைமுத்துங்
குளிர்வா ருதியின் விளைமுத்தும்
வென்றி லசையும் மொருமூன்றும்
விளைவேய் முத்தும் விளைநாடு
மன்ற லசையும் குழல்மாதர்
மருங்கு லசைய மனமசையத்
தென்ற லசையுந் திருநாடு
திகழ்தண் பொருனைத் திருநாடு! (24)

பூவில் வருவான் முடிதேடப்
புள்ளின் வருவான் அடிதேடச்
சேவில் வருவான் முடிசூட்டிச்
செங்கோ லோச்சுந் திருநாடு
மேவி யினைரு ருயிர்வாங்கும்
விழியில் நிழலும் விரையளிசேர்
காவி ம(ல)ரும் அறியாமல்
கலையும் களையார் கடைசியர்கள்! (25)

வேறு

பள்ளியம் பலத்தில் கொண்ட
பாமரற்கு வேத சாரந்
தெள்ளியம் பனுவல் பாடுஞ்
செந்தமிழ் புலவர் நாடு
புள்ளியம் புலித்தோல் சாற்றிப்
பொற்றொடி திருத்தாள் மாறி
வெள்ளியம் பலத்தி லீசன்
வியனட மாடு நாடு! (26)

வேறு

வீரவா ளங்கர மாருதப் புரவி(யை)
விற்கக் க(டியநற் றுரகத்தில் வந்தநாடு
வாரமாங் கொடைக்கை மங்கை(யாள்) பரதவர்
மரபி(னி)ல் வந்துமை பிறந்த நாடு
தீரவா யிரம்வலம் புரிமொண்டு (கொண்டு)வெண்
டிரைமுகத் தெற்றி(ே)ய சிந்திய முத்துந்
தார(கை) (யுந்தி)ன கரனுஞ்(சுக் கிரனுஞ்)சந்
திரனு(மே) பொருவுதண் டமிழ்த்திரு நாடு (27)

வேறு

மதுரைவண் டமிழ்மாறன் தன்னெதிர் வாதவூரர்
குதிரைகொண் டிடப்பொய்த்துநற் கோவணங் கொண்ட நாடு
கதிர்விடுந் திருத்தாள்மாறிக் கழலுடன் சிலம்புமபாம்பு
மதிரநின் றரனூர்வெள்ளி யம்பலத் தாடுநாடு. (28)

வகுப்பு

தாதகி மாதகி தாதளை மாதளை
சண்பக வஞ்சித ழைத்திடுமூர்
போதவிழ் பாடல மேடவிழ் கூவிளை
புன்னைசெ ருந்திநி றைந்திடுமூர்
மாதர்கை வண்டு மதன்கர வண்டு
மலர்ச்சிறை வண்டும யங்கிடுமூர்
கேதகை வன்னி கரந்தை நரந்தை
கிளர்ந்தெழு பூகம்வி ளங்கிடுமூர்
சீதம திக்குடை வேளைவ ரிக்குயில்
திண்பொழி லேறிய ழைத்திடுமூர்
ஆதிய மெங்குமி ருந்துதி ருந்திழை
யொண்ணுத லார்நடை கற்றிடுமூர்
ஆதிவெண் ணீறிடு மன்பர்கண் ணீர்விட
அரிவளை குவளைகண் ணீர்விடுமூர்
நாதனி டத்திலி ருந்துல கம்பெறு
நன்னுதல் மங்கைபி றந்திடுமூர் (29)

உரை

இவ்வண்ண மொத்திருந்துள்ள திருபாண்டிய மண்டலத்தொரு திலகமாய் விளங்காநின்ற [1] மங்கைப்பதி என்னவொத் திருந்ததுவோ வெனில்:

உரையென்றது

சந்தனம், கற்பகம், பொற்பாரிசாதம், சரளம், வகுளம், குந்தம், திலம், ஆலம், மந்தாரம், சிந்தூரம், கன்னிகாரம், வரையாரம், வஞ்சுளம், பூஞ்செருந்தி, மீசுபூகம், குட்சம், ஆரம், கரவீரம், குரவம், தாழை, குலவுலவு, பாடலம், செண்பகம், குறிஞ்சி, மடலவிழும் மலற்(றை)கதை, ஆம்பல், பாநாகம், மாதுளம், பூஞ்செந்தில், மாவீரம், வருக்கை யென்று சொல்லுகின்ற விருட்சங்களாற் சூழப்பட்டுச் சந்திரன் ஊர்தியான விமானமும், ஆதித்தன் ஊர்தியான இரதமும், மகாமேரு பருவதமென்று வலஞ் செய்யத்தக்க கோபுரங்களின் பிரகாசத்தால் மிக விளங்கி உருகும் அன்பர்கள் கண்(ணீரா)றும், இலகு புனற்கண்ணுறும் இரவுபகலாய் எழுகதிர் விளையும் இயல் [2] மங்கை.

வகுப்பு

ஒளிவளர் மென்குழல் வனிதையர் மைந்தர்க
ளுயிர்பட வஞ்சன விழிவிடுமூர்.
ஒலியெழு தெண்டிரை மருவவ லம்புரி
யுயர்மடு வின்கரை யுலவிடுமூர்
தெளிதரு தண்புனல் தனிலுகள் செங்கயல்
திரள்கழு கின்குலை சிதறிடுமூர்
தெனதென தெனதென வெனவென வண்டுகள்
திசைதொறு நின்றுட ரிசைதருமூர்
களிமயில் பொங்கிட நடமிடு மென்பெடை
கசிவொடு தன்சிறை விசிறிடுமூர்
கழையது சிந்திய மணிகளை மந்திக
ளிரையென வன்பொடு கருதிடுமூர்
இளமதி தங்கிய (சடை)முடி யந்தண
ரெழில்வலை கொண்டலை கடல்புகுமூர்
இமையவ ரைந்தரு மலர்கொடு செஞ்சடை
இறை(ய)வர் பதந்தொழு தருள்பெறுமூர்
வளைபுரு வஞ்சிலை விழிகளை யென்றிகல்
மதன்மட மங்கைய ரடிதொழுமூர்

1. மதுரை எனல்வேண்டும். 2. மதுரை எனல்வேண்டும்.

வருணகு லந்திகழ் பரதவர் மங்கையை
வதுவைசெய் தன்றரன் மருவிடுமூர்! (30)

விருத்தம்

இருநிதி யாற்செந் தமிழா லியற்றிடுந்
தொழிற்படைக் கலத்தாற்[1]
றிருமட மாதும் பாரதியும் மதகிரித்
தெரிவையும் மருவிடம் போலும்
அருள்புனை வாமப் பச்சைபோ யரனுக்
கழகழிந் ெ(தா)ருநிற மாக
மருவளர் தாமப் பரதவர் மரபில்
வந்துமை பிறந்தருள் [2]மங்கை. (31)

வேறு

பூசல் விழியு மிருகுழையும்
புரியுங் குழலுஞ் செவ்வாயும்
(பேசும் மொ)ழியுந் திருநகையும்
பெரிய தோளும் சி(று)மருங்கும்
ஆசை யுதவுங் கடிதடமும்
அடியுங் கரமும் அணிநுதலும்
வா(ச) முலையுங் காட்டுதலால்
மங்கை போலும் மங்கைநகர்! (32)

வேறு

சதிரம்வில் லாழி யாக
விடுதழற் புகையுந் தாமக்
கதிர்முலை மடவார் கூந்தற்
காரகிற் புனையு மன்பர்
மதிபுனை சடையார் தம்மை
வந்திக்கும் புகையும் வாடைப்
புதியபொற் கொடியு மஞ்சு
மின்னும்போற் பொலியும் [3]மங்கை! (33)

வேறு

தா(வு) மருவி வரையாவர்
தழையு (மாவர்) பொழிலாவர்

1. சீர் குறைகின்றது. 2. மதுரை போலும். 3 மதுரை.

மேவ வரிய (வி)சும்(பாவர்)
விளங்குந் தனிப்பா தலமாவர்
நாவி கமழும் வனமா(வர்)
(ந)ன்னீர் தரங்கத் தடமாவர்
(வாவு)ந் (தி)ரைவா ருதியாவர்
வன்பால் மங்கை மங்கையர்கள். (34)

தாதுற் றெளிரு மிருங்கமலந்
தன்னிற் கன்னற் றடங்கண்ணு
லோதத் தகும்வெண் டரளமணியுங்
குற்ற தொத்த முன்னிடுங்[1]
காதற் பெருக விளையோர்கள்
களிவண் டுறையு நறுங்கூந்தல்
மாதற் குதவுங் கையுறைபோல்
வயங்குந் தெய்வ மங்கைநகர். (35)

ஆலைப் பழனத் தெழும்படப்பை
அகற்றி முனியென் றதிர்ந்திளமாஞ்
சோலை செழும்பல் லவக்கொம்பில்
கிடந்த தோற்றம் சுரர்வாழ
வேலைக் கடல்நஞ் சுண்டவர்தாம்
மேனி யனலாய் விளங்(குகின்ற)
(மா)லைப் பொழுதிற் றயங்குபிறை
யெனவே விளங்கும் மங்கைநகர். (36)

உரை

[2]வாணனென்று பேருடைய அவுணன், தன் ஆயிரம் கைகளாலும் ஆயிரம் சிவலிங்கம் நாடோறும் பிரதிட்டித்துப் போதுகின்றகாலத்து, ஒருநாள், ஆயிரம் இடத்திலே ஆயிரம் சிவலிங்கம் அருச்சிக்கின்ற அவ் வளவில், மங்கைப்பதியில் ஒரு சிவலிங்கம் அருச்சிக்கத் தான விசேடத் தையும், கால விசேடத்தையும், முகூர்த்த விசேடத்தையும் பற்ற, ஆயிரம் சிவலிங்கமும் அவ்வவ்விடத்தில் இராமல் சேர்ந்து திரண்டு ஒரு சுருபமாக ஆயிரம் முகமும் தோன்றும்வகை ஏகலிங்கமாகி எழுந்தருளியிருக்கின்ற திருநகர்.

---

1. சீர்கள் சரியில்லை.

2. பிரகலாதனின் மகன் விரோசனன். விரோசனனின் மகன் பலி. பலியின் மகன் பாணன். எனவே வாணன் பிரகலாதனின் கொள்ளுப்பேரன். மேலும் வாணன் சிவபெருமானுடைய கோட்டைக் காவலன்.

அதுவன்றியும்

இமையவல்லி தம்பிரானை வணங்கித் "தம்பிரானே! வேத புராண சாத்திரங்களெல்லாம் தேவரீருக்கு ஏகபாதமென்றும், திரிமூர்த்திகளுந் தேவரீரென்றும் சொல்லாநின்றனவாதலால் ஏகபாத திரிமூர்த்தியான சுரூபமானபடிக் காணவேணு" மென்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் ஏகபாத திரிமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கின்ற திருநகர்.

அன்றியும்

காசிவப்பிரசாபதி பூசாகாலத்திலே வணங்கித் "தம்பிரானே! திரிநேத்திரமும், திருமுகமண்டலமும் அடியேன் காணவேண்டும்" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் மூலலிங்கமாகி எழுந்தளியிருக்கின்ற திருநகர்.

அன்றியும்

அரிச்சந்திரன், நளன், மூசுகுந்தன், புருருவன், [1] சற்கரன், [2] கார்த்திகேவீரன் என்று சொல்லுகின்ற சக்கரவர்த்திகள் அறுவரினும், புருருவன் என்கின்ற சக்கரவர்த்தி நவரெத்தினங்களால் ஒரு மாலை கோர்த்து ஒருமுகமாக வகுத்துக் கொண்டுவந்து திருமுடியிலே அந்தமுகமாயிருக்கும்படிச் சாற்றி, அவை நேர் நில்லாமல் ஒதுங்கக்கண்டு, சக்கரவர்த்தி வணங்கித் தம்பிரானே! இம்மாலைகள் திருமேனியைச் சூழ்ந்து நேர் நிற்கும்படி திருமேனி தாரைப்பட்டிருக்கவேண்டும்" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் தாரைலிங்கமாகி எழுந்தருளியிருக்கின்ற திருநகர்.

ஒன்று யிரண்டாய் ஒருபாத மும்மூர்த்தி களாயொரு முகமாய்
நின்றன் தாரை லிங்கமாய் நாத னிருக்குந் தென்மங்கை. (37)

விருத்தம்

ஆதி யிலிங்க மொன்றுடனே
தோன்று மிலிங்க மாயிரமாம்
பாத வனச மலரொன்றுய்ப்
பணைத்த வுருவ மூன்றுகிச்
சோதி வதன லிங்கமதாய்த்
தொகுத்த தாரை லிங்கமதாய்
மாதோ டிறைவ னினிதிருந்து
வாழுந் தெய்வ மங்கைநகர். (38)

1, 2. சகரன், கார்த்திகேயன் போலும்.

தன்வந்தரி வைத்தியம்.

(மூன்றும் பாகம்)

மூஷிக விஷ சிகிச்சை.

1. புங்கவனென்னும் எலி கடித்த விஷத்திற்குச் சிறுகீரை வேரும், மிளகும் அரைத்துத் தேனில் உட்கொள்ளவும்.

2. உத்தமனென்னும் எலி விஷத்திற்குப் பேய்ப்பீர்க்கு விதையும் வேலிப்பருத்தி வேரும், வெற்றிலைச்சாறு வார்த்தரைத்து வெற்றிலையிற் றடவித் தின்னவும்.

3. புரந்தரி என்னும் எலி விஷத்திற்கு வாகை விதையைப் பொடி பண்ணித் தேனிற் கொள்ளவும்.

4. சுண்டெலி விஷத்திற்கு மஞ்சிஷ்டி, பற்பாடகம், இவைகளைப் பொடிசெய்து தேனிலாவது, பசுவின் நெய்யிலாவது குழப்பி உட்கொள்ளவும்

5. அரணனென்னும் எலி விஷத்திற்கு, முத்தக்காசு (கோரைக் கிழங்கு); பற்பாடகமிவைகளைப் பொடிசெய்து தேனிற்குழப்பியுட்கொள்ளவும்.

6. குலமந்திரி என்னும் எலி விஷத்திற்குச் செஞ்சந்தனமுந் திப்பிலியும் பொடிசெய்து தேனிற் கொள்ளவும்.

ஷை விஷத்திற்கு வெள்ளைக் காக்கணம் வேரும், வில்வ வேரும் பொடிசெய்து தேனிற்கொள்ளவும்.

7. பாண்டு புத்திரி என்னும் எலி விஷத்திற்குக் கோரைக்கிழங்கை நெய் வார்த்தரைத்துக் கடிவாயிற் பூசத்தீரும்.

8. புண்ட்ரகனென்னும் எலி விஷத்திற்கு வேப்பம்வேர், மிளகு, கோஷ்டம், எருக்கம்பால், தலைச்சுடு வள்ளி வேர் (பொன் முசுட்டை வேர்), செருப்படி இவையெல்லாம் பாலிலரைத்து உருண்டை செய்து, உச்சந் தலையிலும் தடவி, உள்ளுக்கும் கொள்ளவும். மருந்து உட்கொண்டதின் மேல் உடம்பெல்லாம் எலிக்குஞ்சுபோலத் தடிக்கும். அதன்பிறகு இலுப்பைத் தோல் சீவித் தண்ணீரிற் போட்டுக் காய்ச்சியுட்கொள்ளவும்.

9. அரா வென்னும் எலி விஷத்திற்கு அவுரிவேர், சங்கம் வேர் சரி கொண்டரைத்து வெள்ளாட்டுப் பாலிலாவது அல்லது தயிரிலாவது குடிக்க

வும். பருத்திவிதைப் பருப்பும், பெருங்காயமுங் கூட்டி வெள்ளாட்டுப் பாலிற் குடிக்கவும். இரும்பைக் காய்ச்சி எலிமிச்சம்பழச் சாற்றிற் தோய்த்து எடுத்துக் குடிக்கவும். எருக்கம்பழுப்பை யிடித்து மூன்றிள நீர் கண்திறந்து பனியில் வைத்து விடியிற்காலையில் அதனை நன்றாகப் பிசைந்து இறுத்துக் குடிக்கவும். இவ்வாறு 3 நாட்கள் குடிக்கவும். இருபத்தோரு மிளகு, வில்வவேர் கழஞ்சு (1¼ வராகனெடை) கூட்டி இடித்துக் கால்படி விளக்கெண்ணெயில் போட்டு வெந்து, பதத்தில் வடித்துக்கொள்ளவும். இதனைப்பருக எல்லா விஷங்களுந் தீரும்.

10. பன்றி மூக்கன் எலிவிஷத்திற்கு எலியாதளைக் கிழங்கு (எலியாமணக்கங்கிழங்கு) அரைத்துச் சிறுநீரில் அல்லது பசுவின் பாலிற் கரைத்துக்கொள்ளவும்.

11. கடைப் பல்லனென்னும் எலிவிஷத்திற்கு மற்ற எலிக்குச் சொன்னதுபோகச் சொல்லாத மருந்துகளை விஷசிகித்ஸைகளிற் கண்டு செய்யவும்.

கர்ண ரோக சிகித்ஸை

1. தேவதாரம், கடுகு இவைகளை நொச்சிச் சாற்றிலரைத்துக் கரைத்து நல்லெண்ணெயும் விட்டுக்காய்ச்சி வடித்துக்காதிலிட வேதனை தீரும்.

2. வசம்பு, முருங்கைவேர், சடாமாஞ்சில், பூண்டு, இந்துப்பு, கற்கடசிருங்கி இவையொக்க அரைத்து எண்ணெயிற் கலக்கி வெந்து வடித்துக் காதில் விட வேதனை தீரும்.

3. உள்ளி எருக்கிலையிற் பொதிந்து புடத்தில் வெந்து கசக்கிச் சிறு சூடாயிருக்கிறபோது விடக் காதிலுண்டான நோக்காடு தீரும்.

4. எழுச்சியுண்டாய்க் குத்தலுங் கூடியிருக்கில், வெள்ளாட்டு மூத்திரத்தில் இந்துப்புப் பொடிசெய்து போட்டுச் சுடவைத்து விட, வேதனை தீரும்.

5. உள்ளி, இஞ்சி, முருங்கை வேர், கதலி வாழைக்கிழங்கு, இவையொக்க வெதுப்பிக் காதிலிடக் கர்ணசூலை தீரும்.

6. எருக்கங் கொழுந்தும், உப்பும், காடி வார்த்தரைத்துக் கள்ளியிலையிற் பொதிந்து, வெச்செனச் சுட்டுக் கசக்கிக் காதில் விடக் கர்ணசூலந் தீரும்.

7. ஆட்டுப்புழுக்கை, முருங்கைப்பட்டை, ஆட்டுமூத்திரம் இதில் எண்ணெய் விட்டுக் காய்ச்சிப் பதமாயிறக்கிக் காதில் விடச் சீழ்ப் பாய்ச்சல் விடும்.

நாசிகா ரோக சிகித்சை

1. அதிமதுரம், விளாவரிசி, தேவதாரம் இவையரைத்து எண்ணெயிற் கரைத்துப் பதத்தில் வடித்து, நாசியில் நசியமிட நாசிகா ரோகந் தீரும்.

2. நல்லெண்ணெய் படி ¼ வெள்ளாட்டுக் கோமியம் படி 1
தயிர் படி ¼ விளாங்காய்ச் சதை விராகனிடை 2

இவை கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நாசியில் நசியம் விட, மூக்கில் நீர்ப்பாய்ந்து நாறுகிறது நிற்கும்.

தந்த ரோக சிகித்சை

1. மரமஞ்சள் வேப்பந்தோல்
வெள்ளி லோத்ரம் கோட்டம்
விளாவரிசி

இவைகளை யுலர்த்திப் பொடி செய்து, தந்தவியாதியிற்றேய்க்கக் குத்தல், இரத்தம் விழுகிறது நிற்கும்.

2. பொடுதலைச் சாற்றிலே தேங்காய் நெய் (தேங்காய்ப்பாலெண்ணெய்) விட்டுக் காய்ச்சி வடித்துக்கொப்பளிக்கப் பல் வியாதிகள் தீரும்.

3. பங்கம்பாளை (ஆடு தீண்டாப்பாளை) மரமஞ்சள்
தேவதாரம் கோரைக்கிழங்கு
வெள்ளி லோத்திரம் மஞ்சள்

இவைகளைப் பொடி செய்து, தேனில் கூட்டிப் பல்லடியிலே தேய்க்கத் தந்தத் தடியிலே நிற்கிற துன்மாங்கிஷங்கள், குத்துதல், இரத்தம் சொரிதல் முதலியவையெல்லாந் தீரும்.

4. பெருங்காயத்தைப் போட்டுத் தண்ணீரிற் காய்ச்சிக் கொப்பளிக்கப் பல் வியாதி தீரும்.

மிகுந்த தந்த ரோகத்திற்கு

1. பெருங்காயத்தைப் பல்லிற் றேய்க்க வேதனை நிற்கும்.

2. தேங்காய் நெய்யிற் பொடுதலைச் சாறு சரிகூட்டிப் பெருங்காயமுமாகக் காய்ச்சி வடித்துக் கொப்பளிக்கத் தந்தரோகந் தீரும்.

3. பல்லின் மேலே நல்ல பெருங்காயத்தை வைத்து அணைத்த மிகுந்த பல் வேதனை தீரும்.

பல்லசைவு நிற்க

1. மருக்காரை வேர்ப்பட்டை மருதம்பட்டை
வெள்வேலம்பட்டை எருக்கம்வேர்ப்பட்டை
சுக்கு

இவைகளை யெல்லாஞ் சரி கொண்டிடித்துக் கஷாயம் பண்ணிக் கொப்பளிக்கத் தந்தவாயு, அசைவு தீரும்.

2. துத்தம் துரிசு சாதிக்காய்
மாசிக்காய் கொம்பரக்கு கொடுக்காய்ப்புளி
காசுக்கட்டி திப்பிலி
இவை வகைக்கு வராகனெடை 1 அரப்பொடி வராகனெடை 2

இதுவெல்லாம் எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து 2 வில்லைகளாகத் தட்டி, அதில் ஒரு வில்லையைச் சூரிய புடமாக உலர்த்தவும். மற்றொரு வில்லையைச் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி, மயில் கழுத்து நிறம் பிறக்கத் தீ எரித்து எடுத்து, 2 வில்லைகளையும் கூட்டிப் பொடிசெய்து. அந்தப் பொடியில் கொஞ்சம் கொஞ்சம் பல் தேய்த்து, வெந்நீர் விட்டுக் கொப்பளிக்கவும் கைப்புப் புளிப்புத் தவிர்க்கவும். தந்தவாயு, பல்லசைவு, உலைவு தீரும்.

காச ரோக சிகித்சை

இரஸம்	வராகனெடை	1	கெந்தகம்	வராகனெடை	1
திப்பிலி	,,	3	கடுக்காய்	,,	4
கழற்சிப் பருப்பு	,,	5	ஆடாதோடையிலை	,,	5

இவைகளைப் பொடி செய்து, முக்கழஞ்சு பொடி தேனிலிடச் சிலேஷ்ம காசந் தீரும்.

இந்தப் பிரயோகம் தைவேளை காய்ந்த நீரில் (கஷாயத்தில்) 20 தடவை பிசைந்துலர்த்திப் பொடி செய்து, முன் சொன்ன அனுபானத்திற் கொடுக்கவும். சிலேற்பன காசந் தீரும்.

காசத்திற்குத் தாரகேச்வர ரஸம்

ரஸம்	வராகனெடை	1	வெள்ளிபற்பம்	பணவெடை	$2\frac{1}{2}$
மனோசிலை	,,	1	அரிதாரம்	வராகனெடை	1

ஆடாதோடை, நொச்சிச்சாறு வார்த்தரைத்து 2 ஜாமமரைத்து, ஒரு சட்டியில் வாங்கி, அகலிட்டு மூடி, மேலே மணலை சொரிந்து, அடுப்பில் வைத்து 2 சாமம் எரிக்கவும். புடம் ஆறியபின் பொடி செய்து 2 குன்றிப் பிரமாணம் எடுத்துத் தேனில் கொடுக்கச் சத(க்ஷத) காசந் தீரும்

இதற்கு அனுபானம் — மாதளம் பிஞ்சு, கடுக்காய்த்தோல், நெல்லி முள்ளி, தான்றித்தோல், சுக்கு, மிளகு, திப்பிலி இதற்குச் சரி வெல்லங் கூட்டி அந்த ரசம் கொண்டாப்போலே (உட்கொண்டவுடன்) முன் சொன்ன மருந்து 3 கழஞ்சு ($3\frac{3}{4}$ வராகனெடை) தின்னச் சர்வ காசமுந் தீரும்.

சூரிய ரஸம்

ரஸம் வராகனெடை	1	கெந்தகம் வராகனெடை	2
தாமிரபற்பம் ,,	3	அரிதாரம் ,,	5

பொடி செய்து அப்பிரக பற்பம் 10 வராகனெடை

வசம்பு	மஞ்சள்	கோஷ்டம்
கொடிவேலி வேர்	வெங்காரம்	இந்துப்பு
அதிவிடயம்	பங்கம்பாளை	சேவகன் கிழங்கு
மிளகு	கழற்சிப் பருப்பு	

இவைகள் ஓரொன்று வராகனெடை 3

இவைகளைக் கையாந்தகரைச் சாற்றில் 3 நாளரைத்து 3 பணவிடை உருண்டை திரட்டி, ஒரு உருண்டை தேனிலிட விக்கல், இருமல் சதகாசம் (க்ஷத) தீரும்.

சய, காசத்திற்கு இந்திர வாருணியாதிச் சூரணம்.

பேய்த்துமட்டி வேர்	கையாந்தகரை,
திப்பிலி,	எள்ளு,

இவைகளைப் பொடி செய்து கழஞ்சு பொடி தேனில் உட்கொள்ளவும்.

(2) சுயமக்கினி ரஸம் வராகனெடை 3. தேனிலிடச் சயம் தீரும்

நிர்குண்டி க்ருதம்

நொச்சிச்சாறு 4 படி. நெய் 1 படி.

இவ்விரண்டையும் ஒன்றுகலந்து அடுப்பின்மேல் வைத்து எரித்து, அதனுடன்

செவ்வியம்	கொடிவேலிவேர்
வாலுளுவையரிசி	ஏலக்காய்
கிராம்பு	பச்சிலை
சிறுநாகப்பூ	கடுகரோகிணி
கோஷ்டம்	

இவைகளைச் சரி யெடுத்து, இடித்து இந்தத்தூள் வகைகள் 1 உழக்கு எடுத்து நெய்யிலிட்டு எரித்துப் பக்குவத்தில் இறக்கவும். இந்த நெய்யில் முக்கழஞ்செடுத்து நக்கிவரவும்.

பத்தியம்- பழய அன்னம், கோதுமைச்சாதம் முதலியவைகளைக் கூட்டவும்.

சயம், காசம், சுவாசந் தீரும்.

காசத்திற்குத் தூமம்

நாயுருவிச் சமூலம் அவுரியிலைச் சாற்றில் அரைத்து, ஒரு சுத்தமான புடவைச் சீலையிலூட்டிக் காய்ந்தபின் அரிதாரம், மனோசிலை பொடி செய்து சீலையிற் தூவித் திரியாகப் பண்ணி (நெய்யில் தோய்த்துக்) கொளுத்திப் புகை கொள்ளவும். சயம், காசந்தீரும்.

க்ஷய ரோகம் எட்டின் பெயர்

பால க்ஷயம்	தபன க்ஷயம்
வீர க்ஷயம்	க்ஷய ரோகம்
தருண க்ஷயம்	ஆர்த்த (ஆர்த்ர) க்ஷயம்
கணிக க்ஷயம்	ரசேட்சிம (ராஜயக்ஷ்மா) க்ஷயம்

வால (பாலச்சய) ரோகத்திற்கு மருந்து

வாலமே வந்தபோது மருந்தினிப் புகலக்கேளாய்
சீலமாங் கடுக்காய் நல்ல திப்பிலி சமபாகந்தான்
பாலுயர் மொழியாய்! மூன்று பங்கிலந்தைப் பருப்பிட்
டோலமாய் மூன்றுமாத முண்டிடத் தீருமென்றே. (1)

(இ-ள்) கடுக்காய்த்தோல் 1 பங்கு — திப்பிலி 1 பங்கு
எலந்தைக்கொட்டையிலுள்ள பருப்பு 3 பங்கு

இவைகளை ஒரு கல்லுரலிலிட்டிடித்து 3 மாதங்கள் உட்கொள்ளவும். பாலகாசந்தீரும்.

வீர ரோகத்திற்கு மருந்து

வீரமே வந்தபோது விளம்பதி விடையஞ் சுக்கு
சேருமா கதிகிராம்பு திப்பிலி சமபாகங் காண்
பாரவே தேற்றான்கொட்டை யளவு நற்றேனில் கொள்ளச்
சோர்விலா தேகுந் தேகஞ் சுகம்பெறு முண்மைசொன்னோம் (2)

(இ-ள்) அதிவிடயம் — சுக்கு
யானைத்திப்பிலி — கிராம்பு
திப்பிலி

இவைகளைச் சமனெடையெடுத்து உலர்த்திக்கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு, தேற்றாங்கொட்டையளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும், தேக சுகம் உண்டாகும்.

தருண ரோகத்திற்கு மருந்து

தருணத்துக் கரிதகிக்காய் சாதிக்காய் நல்லசீரம்
கருதுதிப் பிலிகிராம்பு சுக்குகம் பிப்பிசின் காட்
டுரியதா தகிப்பூவுற்ற விடையமே யீன்றென்றுக
வருமருந் தொன்றுக் கொன்றி ரட்டித்து மதுவிற்கொள்ளே (3)

(இ-ள்)	கடுக்காய்த்தோல் 1 பங்கு	சாதிக்காய் 2 பங்கு
	சீரகம்-3 பங்கு	திப்பிலி-4 பங்கு
	கிராம்பு-5 பங்கு	சுக்கு-6 பங்கு
	கம்பிப்பிசின்-7 பங்கு	காட்டாத்திப்பூ- 8 பங்கு
	அதிவிடையம்- 9 பங்கு	

இவைகளைக் கல்வத்திலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, ஒரு குத்தளவெடுத்து 3 வேளை தேனில் உட்கொள்ளவும். தருண க்ஷயரோகம் தீரும்.

கணிக ரோகத்திற்கு மருந்து

கணிக ரோகந் தனக்குக் கடுக்காய் திப்பிலி சுக்கேலம்
பணியி லவங்கப் பட்டை பத்திரி விடைய மீராய்
தணிகடற் கரைவேள் சென்னி சார்புலன் வேதஞ்சூலந்
துணி யிபமருப்பதன்கைச் சுகப்பெறத் தேனிற் கொள்ளே. (4)

(இ-ள்)	கடுக்காய்த்தோல்	திப்பிலி
	சுக்கு	ஏலக்காய்
	இலவங்கப்பட்டை	இலவங்கப்பத்திரி
	அதிவிடயம்	

இவைகளைச் சமனெடுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து தேனில் உட்கொள்ளக் கணிக க்ஷயரோகந்தீரும்.

தபன ரோகந்திற்கு மருந்து

ஆனதோர் தபனரோக மணைந்திடில் கிராம்பதொன்று
கானில்மாகதி யிரண்டு கருதிய சுக்கு மூன்று
தானரி தகியோர் நாலு தகுமதிவிடைய மஞ்சு
மானுலாம் விழியாய்! கம்பிப் பிசினாறு மதுவிற்கொள்ளே. (5)

(இ-ள்) கிராம்பு	1 பங்கு	யானைத்திப்பிலி	2 பங்கு
சுக்கு	3 ,,	கடுக்காய்த்தோல்	4 ,,
அதிவிடயம்	5 ,,	கம்பிப்பிசின்	6 ,,

இவைகளை நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்து, மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தேனில் உட்கொள்ளவும். எரிச்சலுடன்கூடிய க்ஷயரோகந்தீரும்.

சயரோகத்திற்குப் பொதுவான மருந்து

ஆகிய சயரோகத்திற்கு அவுஷதந் தேற்ருன் கொட்டை
வேகிய மிளகு சுக்குத் திப்பிலி விடையந் தான்றி
பாதியில் கடுக்காய் நெல்லிக் காயுஞ்சம பாகங்கூட்டி
தேகநோய் தீர நல்ல தேனிலே நுகருவீரே. (6)

(இ-ள்) சீவிய தேற்ருங்கொட்டை	மிளகு
சுக்கு	திப்பிலி
அதிவிடையம்	தான்றிக்காய்த் தோல்
கடுக்காய்த் தோல்	நெல்லி வற்றல்

இவைகளைச் சமனெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ்செய்து மூவிரல் கொள்ளும் அளவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். க்ஷயரோகந்தீரும்.

ஆர்த்தத்திற்கும் ரசேட்சிம க்ஷயத்திற்கும் அவுஷதம் விதிக்கவில்லை. ஆகையால் இதற்கு மேலும் ஔஷதங்கள் விசாரித்துக்கொள்ளவும்.

சுவாசரோக சிகித்சை

சுத்திசெய்த ரஸம் 1 வராகனெடை சுத்தி கெந்தகம் 2 வராகனெடை இவைகளையொரு கல்வத்திலிட்டு, நன்ருகக் கருப்பாகும் வரை அரைத்துக் கஜ்ஜலி செய்து, கற்ருழைச்சாறுவிட்டு அரைசாமமரைத்துச் செப்பு வட்டிலில் வழித்து வைத்துக்கொள்ளவும். ஒரு செங்கலில் சதுரமான குழிசெய்து அதில் முன்சொன்ன கஜ்ஜலியை வைத்து, மேலே மற்ரொரு செங்கல்லை வைத்துச் சீலைமண் செய்து (1 முழம் நீள அகலம் உள்ள குழியில் எருமுட்டைகளை யடுக்கி) அதில் வைத்துப் புடம் போடவும். புடம் ஆறிய பின்னர் மருந்தை யெடுத்துப் பொடி செய்துகொண்டு 2 குன்றியளவெடுத்துத் தேனில் கொடுக்கவும்.

பேய்த்துமட்டி வேர்	தேவதாரு
சுக்கு	மிளகு
திப்பிலி	

இவைகளையும் சமனெடுத்து இடித்துச் சூரணம்செய்து அதனுடன் முன் மருந்தையும் கூட்டித் தேனில் கொடுக்கவும்.

இரஸப் பதங்கம்

சுத்தி செய்த ரஸம்	சுத்தி செய்த கெந்தகம்

இவையொன்றுக்குக் கழஞ்சு ஒன்று, (1¼ வராகனெடை)

முதலில் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து செந்நாயுருவிச்சாறு விட்டு மறுபடியும் அரைத்துக் கொள்ளவும். இவ்விழுதை வாயகன்ற சட்டியில் வைத்து, உப்பு அதில் பாதி வரை போட்டு, அதன் வாய்க்குத்தக்கபடி மேலும் ஒரு சட்டி வைத்து மூடிச் சீலை மண் செய்யவும். பின்னர் இச்சட்டியை அடுப்பின்மேல் வைத்துக் கிரமாக்னியாக எரிக்கவும். அப்போது மேலுள்ள சட்டியில் தண்ணீர் வார்த்துக்கொள்ளவும். மூடிய சட்டியின் அடியில் பதங்கம் பற்றும். அந்தப் பதங்கத்தைச் சுரண்டி எடுத்துக்கொள்ளவும் சட்டியிலும் மீதியுள்ள மருந்தையும் கூடச் சேர்த்து சுத்திசெய்த கெந்தகம் ½ கழஞ்சுங் கூட்டிப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இதில் 2 குன்றிப் பிரமாணம் எடுத்துத் தேனில் கொடுக்கவும். இதனுடன் கடுகரோகிணி 1 கழஞ்சும் எடுத்துப் பொடி செய்து தேனுடன் குழைத்து உட்கொள்ளச் சுவாசகாசம் தீரும்.

வாலுளுவைச் சூரணம்

வாலுளுவை	ஏலக்காய்
கிராம்பு	திப்பிலி

இவைகள் வகைக்கு 3 கழஞ்சுகள் (3¾ வராகனெடை). மிளகு 6 வராகனெடை. இவ்விரண்டையும் பொடி செய்து சர்க்கரை சேர்த்துத் தேனுடன் உட்கொள்ளவும்.

சுவாசகாசத்திற்கு

சுத்திசெய்த மனோசிலை	பெருங்காயம்
வாலுளுவையரிசி	மிளகு
கோஷ்டம்	இந்துப்பு

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு வீதமெடுத்து நன்றாகச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். இதில் 3 கழஞ்சளவு சூரணம் எடுத்து, வேண்டுமளவு தேனும்—அதில் பாதியளவு நெய்யுங்கூட்டிக் குழைத்துக் கொடுத்தால்

சுவாச ரோகம், கபரோகந்தீரும்.

சுபமக்கினி ரஸம் 1 கழஞ்செடுத்துத் தேனிலிடச் சுவாசகாசங்கபம், பாண்டு இவைகள் தீரும்.

சந்திக்கு மருந்து வகைகள்

(வாந்திக்கு)

சத்தி ரோக வகைகள் — 5

இதில் வாதோத்தரமான சத்திக்குப் பாலில் விரேசனமாகச் செய்யவும். பிரியமாயுள்ள பறவை மாங்கிஷங்களைக் கொடுத்து, பிறகு, முகத்திலே குளிர்ந்த தண்ணீர் இறைக்கவும். மனதிற்குப் பொருந்தாத கலவைகளை உண்டுபடுத்த மாங்கிஷம் ஆகாதவர்களுக்குப் பொரியரிசி மாவினிற் சீனியும் நெய்யும் கூட்டிப் பணியாரம் சமைத்துக் கொடுக்கவும். சத்தி தீரும்.

நெய்யிலிந்துப்பு இட்டுக் கொடுக்கவும்.

முன் மருந்தைச் சுடவைத்துக் கொடுக்க காசத்துடன் கூடிய சத்திகள் தீரும்.

இரத்தபித்த சத்திக்கு

சாதிக்காய்
கொத்துமல்லி விதை
திராக்ஷைப் பழம்
சிவதை வேர்
கிராம்பு
இலந்தைக்கொட்டைப் பருப்பு
கரும்பு

இவைகளைச் சமமெடுத்து இடித்து 8 மடங்கு தண்ணீர் விட்டு அடுப்பின் மேல் வைத்து நாலிலொன்றாக வற்றவைத்துக்கொண்டு உட்கொள்ளவும். இரத்தபித்தத்தினாலுண்டான சத்தி தீரும். விரேசனமுமாம்.

இரத்தவாந்தி, தாகத்திற்கு

நெற்பொரி
வில்வவேர்

இவ்விரண்டையும் கஷாயமிட்டுக்கொடுக்கலாம்.

நாவல் கொழுந்து
வெட்டிவேர்
சுக்கு
மாங்கொழுந்து
இலாமிச்சவேர்

இவைகளை இடித்துக் கஷாயமிட்டுத் தேன் விட்டுக் கொடுக்கச் சத்தி, ரத்தம், தாகந்தீரும்.

சத்தி, அதிஸாரம், தாகத்திற்கு

வில்வவேர்
கொத்துமல்லி விதை
நெற்பொரி
குறுந்தோட்டிவேர். (பலா)
சுக்கு
சிறுபயறு

இவைகளை யிடித்துக் கஷாயம் செய்துத் தேன் விட்டுக் கொள்ளச் சத்தி, அதிஸாரம், தாகம், மோகம் இவைகள் தீரும்,

சத்தி ஐந்திற்கும்

(1) ஆடுதீண்டாப்பாளை (பங்கம்பாளை) வெட்டிவேர்
முத்தக்காசு (கோரைக்கிழங்கு) திராக்ஷைப்பழம்
சீரகம் சிறுசாஞ்சோறிவேர்
வில்வவேர் சுக்கு

இவைகளைச் சமனெடுத்து இடித்துக் கஷாயம் செய்து கொடுக்க 5 வித சத்திகளுந் தீரும்

(2) பங்கம்பாளை (ஆடுதீண்டாப்பாளை) பருத்திக்கொட்டைப்பருப்பு
ஏலக்காய் திப்பிலி
நெற்பொரி சர்க்கரை

இவைகளை இடித்துக் கஷாயம் செய்து வடிக்கட்டி அடுப்பின்மேல் வைத்துக் குழம்பாகக் காய்ச்சிக்கொண்டு உட்கொள்ள சத்தியெல்லாம் தீரும்.

(3) பருத்திவிதைப் பருப்பு இலந்தைக்கொட்டைப் பருப்பு
ஏலக்காய் கிராம்பு
பச்சிலை சிறுநாகப்பூ
நெற்பொரி கோரைக் கிழங்கு
சந்தனம் பச்சைக்கர்பூரம்

இவைகளை நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து தேனில் குழைத்துக் கொண்டு நாக்கில் வைக்கச் சத்திகள் 5ம் தீரும்.

வில்வாதி லேகியம்

வில்வ வேர் 16 பலம் எடுத்துத் துண்டுகளாக்கி 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து $\frac{1}{6}$ வற்றவைத்து வடிக்கட்டி, சர்க்கரை 16 பலம் போட்டுக் கரைத்து, அதனுடன்

கோரைக் கிழங்கு கொத்துமல்லி விதை
சீரகம் ஏலம்
இலவங்கம் சிறுநாகப்பூ
சுக்கு மிளகு
திப்பிலி திராக்ஷைப்பழம்
தாளீசபத்திரி

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்துப் பொடி செய்து முன் சொல்லிய பாகில் தூவிக் குழம்பு பதத்தில் தேன் விட்டுக் கிண்டி, இறக்கிவைத்துக்கொள்ளவும். தினந்தோறும் இதனையுட்கொள்ளச் சத்தி, அரோசகம், அக்கினிமாந்தம், சுவாசம், வாய் நீரூறல் இவைகள் தீரும்.

தாக சிகித்ஸை விருத்தம்

தாது வாதம் பயித்தியஞ் சேற்பனஞ்
சன்னி வாத நிசாரப் பொசிப்புவெப்
பீதினலங் குறித்துப் பிரமேகத்தா
லியைந்த தாது வுலர்ந்ததினலுடல்
பீது மாங்கிஷ பஞ்சுகையாற் சுர
வெம்மையால் வெகு நாட்சென்ற ரோகத்தா
லோது நாவில் நரம்புலர்ந்தே மிக
வோங்குந்தாக மெனமுனி வோதினர். (1)

ஓதுந் தாகம் பலவுள்ள ரோகத்தி
ஞேடுங் கூடி யிருக்கு பசித்திறிற்
காது மக்கினி கெட்டுடல் வற்றிடிற்
கண்ட தாகம சாத்திய மற்றிவை
வாதபித்த சமன்கள் செய்யாமையால்
மனம் பொருந்து மவையுடல் சேர்க்கையால்
சீதமானவை பந்நீர் குறும்பை நீர்
சேர்க்கையாற் கொள்கையாற் ருகந்தீருமே. (2)

(இ-ள்) வாதம், பித்தம், கபம், சன்னிவாதம் இவைகளை அதிகரிக்கச் செய்யும் பண்டங்களை உட்கொள்ளுவதனுலும், பிரமேகத்தாலும், தாதுக்கள் (இரஸாதி) உலர்ந்துபோவதனுலும், அதிகமான சுரவேகத்தினுலும், நாட்சென்ற ரோகத்தினுலும், நாக்கிலுள்ள நரம்புகள் உலர்ந்து தாகம் மிகவெடுக்கும்.

இந்த தாகரோகம் பல வியாதிகளோடு கூடவே வந்தாலும் வரும். பசி தாறுமாருகி உடல் இளைத்துத் தாகம் உண்டாகும் இது அசாத்திய மாகும். மற்றும் வாத, பித்த தோஷங்களை சமன் செய்யாமலும், மனது கொந்தளிப்பினுலும் ஏற்பட்ட தாகரோகத்திற்கு பன்னீர், குரும்பையின் நீர் இவைகளையுபயோகிப்பதினுல் குணம் உண்டாகும்.

சுரம், தாகத்திற்கு மருந்துகள்

தாகமா மனல் புத்தோடு தீயெழத்
தான் வறுத்துத் தண்ணீர்விட் டாற்றியே
பாகமாக வடித்துக் குளுர்ச்சிசேர்
பதார்த்தஞ் சேர்த்துண்ணப் பன்மலர்சூட்டிடக்
தேகமீது பந்நீரைத் தெளித்திடச்
சீனித் தேனிந்து சங்கினில் மாங்கிஷ
மாகும் பால்நெய் யிவைவடித்துண்டிட
அடங்குந் தாகச் சுரங்களு மன்னமே.

முன்னுரை

''மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே''

என்று கூறி, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதாரம் செய்தருளின பேரிடம் 'சீகாழிப்பதி'. இச் சீர்காழித் திருக்கோயிலின் கோபுரப் பகுதிக்குத் 'திருமலை' என்று பெயர். இத்திருமலையின் உச்சியில் உள்ள பொற்கலசத்தருகே சென்றால், காலதர் (ஜன்னல்) வழியாகக் காட்சிதருபவர்தான், இந்நூலில் புகழப்படும் 'சட்டைநாதர்' என்னும் யாம் வணங்கும் கடவுளாவர். சந்தன மரத்தாலான இவ்வுருவம் நின்ற திருக்கோலம். பைரவத் தோற்றம். நீராட்டம் இல்லை. புனுகுச்சட்டம் சாத்தப்பெறுகின்றது. இவ்வுருவத்தின் தோற்றமே கருமை. அதுவும் குறுகிய முற்றிலும் மூடப்பட்ட இடப்பகுதியிலிருப்பதால் அவ்வளவு எளிதில் இவரைக்கண்டு தரிசித்துவிட முடியாது.

இவ்விறைவனைப் பூசிக்கச்செல்ல, மிகச்சிறிய நுழைவாயில் மட்டுமே உள்ளது. இது இறைவனை அடையப் பணிவு தேவை என்பதனை உணர்த்துகின்றது. இரவில் விளக்கு ஒளியில் தெளிவாகக் காட்சியளிப்பார். இரவில் இங்குள்ள இறைவனுக்கு அர்த்தசாம பூசை நடந்தபிறகு, இக்கடவுளுக்குச் சிறப்பு வழிபாடு நிகழும். வெள்ளிக்கிழமை மிகச் சிறந்த நாள். இக் கோயிலுக்கே 'சட்டைநாதர்'தான் முக்கிய கடவுளாகக் கருதப்படுதலின் இத்தேவத்தானத்துக்கு ''அருள்மிகு சட்டைநாத சுவாமி தேவத்தானம்'' என வழங்குகின்றது. இதனாலேயே இக்கடவுளுக்கு எத்துணை சிறப்புண்டு என்பது அறியத்தக்கது. இத்திருக்கோயில் திருத்தருமபுர ஆதீனத்துக்கு உட்பட்டது.

சட்டைநாதர் வரலாறு

திருமலைப் பகுதியின் தோணியப்பர் திருச்சுற்றில், இச்சட்டைநாதர் வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. மகாபலியின் பொருட்டு வாமன வடிவெடுத்த திருமாலின் தோலைப் போர்த்துக்கொண்டதாக உளது.

இரணியனைக்கொல்வதற்காகத் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்தார். அவனைக் கொன்றபிறகு, மதிமயக்கமுற்று, செருக்குற்று, உலகத்தைத் துன்புறுத்தி, அழிக்கத் தொடங்கினர். தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்க கைலைநாதர் வீரபத்திரரை அனுப்பினர். அவர் சரப உருக்கொண்டு நரசிம்மத்தை அழித்து, அதன் தலையையும் தோலையும் கொண்டுவந்து இறைவனிடம் தரவே, இறைவன் நரசிம்மத் தலையினைத் தனது தலைமாலையின் நாயக மணியாகக் கொண்டு, தோலைச் சட்டையாகப் போர்த்திக்கொண்டார். இதனைச் 'சரப புராணம்' நரசிங்கவதைச் சருக்கம் விளக்கும் :

''மத்த மானிடக் கோளரி வதனமுந் தோலுங்
கைத்த லத்திடைக் கொண்டிரு விசும்பிடைக் கரந்தான்
தத்து வங்கடந் தொளிர்பவன் சரபமாம் வடிவன்
வித்த கன்கரு ணாகரன் வீரபத் திரனே! (47)

''மறைந்து சென்றரு ளொப்பிலா வீரனு மறைநா
லறைந்த வெள்ளியம் பொருப்பிடத் தணைந்திறை யருளைத்
துறந்த மானிட மடங்கலின் வதனமுந் தோலுஞ்
சிறந்து நல்கின னகிலநா யகன்றிருக் காத்தில்'' (48)

''அற்றை நாள்முத லரியத ளாடையாய்ச் சாத்தச்
செற்று மாய்த்தவத் திறனர மடங்க[1]லா னனத்தை
முற்று நான்முகர் தலைசெறி மத்தமா லிகையிற்
பற்று நாயக மணியெனப் புனைந்தனன் பரமன்.'' (49)

இதனால், திருமாலின் தோலினைச் சட்டையாகத் தரித்து, வைரவ மூர்த்தமாக விளங்கும் சிவபெருமான் வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளுகின்றார். இவர் பாவங்களைப் போக்குகின்றதனால் இவருக்கு 'ஆபதுத்தாரணர்' என்ற பெயர் உண்டு.

இத்தகு சிறப்புவாய்ந்த இறைவனைப் புகழ்ந்து தோத்திரமாகப் பாடிய பாடலாகுமிது. முகப்புஏடு இன்மையால் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இது, எமது மகால் சுவடி எண். 693-C/D 141 கொண்டது. இதில், விருத்தம், கலித்துறை, வெண்பா என்னும் மூவகைப் பாக்களும் விரவி வந்துள்ளன. இதில் இருபத்தெட்டு செய்யுட்களே உள்ளன. இந்நூல் முழுவதும் கிடைக்குமாயின் மக்கள் பெரிதும் பயனெய்துவார்கள்.

இதனை ஆய்ந்து வெளியிட அனுமதியளித்த, எமது மகால் கௌரவ காரியதரிசி, திருமிகு வித்துவான் அ. வடிவேலனர் அவர்கட்கும், இந்நூல் சிறப்புற அமையப் பெரிதும் துணைபுரிந்த, திருவாளர் வித்துவான் வீ. சொக்கலிங்கனர் அவர்கட்கும் எனது இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். குற்றம் குறைகள் உளவாயின், அவற்றைத் தெரிவித்தால், அவற்றைத் திருத்தம் செய்துகொள்வதோடு, அன்னவர்களுக்கும் நன்றிக்கடப்பாடுடையேனுவேன்.

இந்நூல் யாவர்க்கும் நலம்பயக்க அருள்மிகு சட்டைநாத சுவாமி அருள்புரியட்டும்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்
7—12—74

வித்துவான் இரா. திலகம்,
சரசுவதி மகால் நூல் நிலையம்.

1. ஆனனம் = முகம்.

*சட்டைநாதர் தோத்திரம்

நூல்

கட்டளைக் கலித்துறை

சிங்கா தனத்திநம் மூகாம்பி யென்னத் திருவு(ரு)க்கொண்
டங்கா தரவுடன் (கொச்சையின்) மேவி யடியவர்தம்
பங்காக வந்து வரங்கொடுக் கின்ற பரிசறிந்(தேன்
சங்கக்) குழைச்சட்டை நாதா அநுதித் தயாபரனே! 1

விருத்தம்

எடுத்தகை வாளும் (பிடித்தகைத்) தண்டும்
இரத்தின சிங்கா தனச்சிறப்பும்
கடுத்தரித் தகிலம் புரந்தகந் த(ரமும்
கனவிலும்) நனவிலும் மறவேன்
பொடித்தசந் திரனை முடித்தநா யகனே
பூத (வே தாளநா யகனே)
தடுத்தெனை யடிமை கொண்டநா யகனே
சண்பைவாழ் சட்டை நாயகனே! 2

(கட்ட)மிட் டிருக்கும் பில்லிசூ னியமுங்
குலைகுலைந் தோடுநின் செபத்துக்
கட்டமிட் (டிருக்கும்) வயிரவ கணமும்
ஆங்காத தொண்டுநான் மறவேன்
நட்டமிட் டிருக்குஞ் சர(ணபங் கய)னே
நம்பினோர்க் குதவும் நாயகனே
சட்டமிட் டிருக்குங் கிரிக்கு நாயகனே
(சண்பைவாழ்) சட்டை நாயகனே! 3

செங்கையிற் றண்டும் சங்குமுத் திரை(யும்
சிங்கவா கன)மு மொளிதிகழுங்
கங்கண புயங்க(ளுங்) கபால சூலமுமென்
கனவிலு நன(விலும் மறவேன்)
கொங்கையிற் குந்தங் குலவுமய் யானைக்
கொச்சையிற் சிகரகோ புரத்திற்
றங்(கியே நித்தம்) பொங்குமற் புதனே
சண்பைவாழ் சட்டை நாயகனே! 4

* சுவடி எண் 693-ல்

வேறு

சடந்தனிலோரு(டல)வ் வுடலி னுக்குத்
தானுயிரா யுயிர்க்குயிருந் தானே யாகி
மடந்தையுமாய் (மடந்தை)க்கு மணாள னாகி
மானவராய் வானவராய் வைய மாகிக்
கடந்தபெரும் பொருளாகி (மனத்)தால் வாக்கால்
காயத்தா லறியாத காட்சி யாகி
தடந்திகழுங் கொச்சைகு(டி கொ)ண்ட னைத்துந்
தானாகி நின்றசட்டை நாதன் தானே! 5

வெண்பா

இடறி வி(ழுந்தாலும் முன்)வந் தெடுக்குங்
கடறுதனிற் சூழ்ந்துவந்து காக்கும் — தடமருவும்
அண்(டர் பிரான்)மலை ஆபற் சகாயவிட
முண்டபிரான் தெண்டா(யு தம்). 6

(பட்ட மரம்)தளிர்க்கப் பண்ணுவிக்கும் பாருலகில்
கெட்டவுயிர் மீளக் கிளைப்பிக்கு(ம் — வட்டமதி)
சூடுஞ் சடாடவியார் சொற்காழிக் கஞ்சுகனார்
ஆடுந் திருமஞ்ச னம். 7

கட்டளைக்கலித்துறை

நகரத்(தா னுக்கும்) மகரத் தவனுக்கும் நாடவொண்ணாச்
சிகரத்திற் பத்தாகுஞ் சித்தத்தில் வேதச் சிரத்திலுறத்
தகரத் திருப்பவன் ஆபதொத் தாரண னும்புகலிச்
சிகரத்தைக் கண்டு தொழுவார்க்கு(ப் பாரினில்) தீங்கில்லையே. 8

வெண்பா

காவற் கடவுள் கமலா லயன்முதலாந்
தேவர்க்கும் வாழ்வு சிதைய(ாமல்) — யாவர்க்கும்
மிக்கவனே வேலைதனில் வெவ்விடத்தை யுண்டருளத்
தக்கவனே சட்டை(நா தா). 9

எப்பெருவாழ் வெய்தாது எப்பொருள்வந் தெய்தாது
முப்பொழுதி லேது முடி(யாது) — செப்பரிய
தண்ணளிசேர் காழிமலைச் சட்டைநா தன்தனது
தண்ணருளே (யாயி)னக் கால். 10

தெற்கு முகமும் திருவழகுந் தெண்டேந்தும்
பொற்புயமும் பொற்(பணியும் மே)கலையும்—நிற்கு
நிலையும் நிலையாத நீடருளும் காழி
மலையுமற வாது மனம். 11

விருத்தம்

(வந்தனை) செய்ய நின்றிருக் கோயில்
வலம்வர வாழ்த்தநின் வடிவைச்
சிந்தையி லிருத்தித் தியான(ஞ் செய்யத்)
திருவருள் புரியுநா ளுளதோ.
அந்தகா சுரனை யிருபிள வாக்கி
அந்தகன் ற(னையுதைத்த தேவே)
சந்திர சேகரனே காழிமா மலையிற்
சயம்புவே சட்டை நாயகனே! 12

கட்டளைக்கலித்துறை

(உற்ற விடர்)தனை நீக்கி யுருமைமுற் காத்தருளும்
பெற்றியர் தங்களைப் பேணிக் கொளலென்று பே(ருலகில்)
சொற்றிடல் கண்டுன் துணைமலர்த் தாழ்தொழு தேன்துயர
மற்றிட வேயருள் தென்(காழி யாப)தொத் தாரணனே! 13

விருத்தம்

எக்கர்தம் பக்க லிரந்திலம் பாட்டின்
இருவினை யி(ரிக்க வல்லவர்தம்)
பக்கரை யெனவே கயவரைத் துதிக்கும்
பரிபவந் தவிர்க்குநா ளுளதோ
அக்(கரமா பிந்துவை) யிலைச்சவே ணியனே
அக்கமே மலைத்தமா லரிக்குச்
சக்கரங் கொடுத்த (சங்கரனே காழிச்)
சயம்புவே சட்டை நாயகனே! 14

தருமுகி லசுரவி மனநினை வெவையுந்
(தடுக்குந் திகிரி) யெனவே
பரிவுடன் கயவர் தனைத்துதித் தயரும்
பரிபவந் தவிர்க்கு(நா ளுளதோ)
தெரிவதற் கரிய திருவுரு வினனே
திருவருட் கடலினிற் பொடித்த

(சருவகத்) தரணிச் சிகரம் துதித்த
சுயம்புவே சட்டை நாயகனே. 15

சோமனே யெ(ன்றுந் தீய)ருக் கிதமே
சொல்விநின் றுயங்கிடா துனது
நாமமே யுரைத்து நின்பெரும் (புகழை
நான்தினந் துதிக்கவே(வ த)ருவாய்
காமன் நேத்திர மாயிரம் பெறவருளிக்
கண்ணிறைற் காம(னைக் காய்ந்த)
தாமவே ணியனே சாமமே னியனே
சண்பைவாழ் சட்டை நாயகனே! 16

வேறு

(முண்ட)கப்பூங் கோதைதனக் கிறைவன் றானும்
முண்டகத்தி லிருந்தருளும் முதல்வன் (றானும்)
(விண்ட)லத்துக் கரசாய வேந்தன் றானும்
வேற்கரனும் பாற்கரனும் விளங்க நாளும்
மண்டலத்தி(ல் விண்டலத்தி லுள்ள பேர்க்கும்
மானவரங் கொடுத்ததெய்வ ராயன் தானும்
தண்(டலைசேர் காழி)மலைச் சிகரத் துச்சி
தனில்நின்ற தமிழ்ச்சட்டை நாதன் றானே! 17

கோ(ளுருங் காம)மெல்லாம் குலைகுலைத்துக்
கொடும்பூத வேதாளக் குறும்ப றுத்து
வேளூரில் வாழும்(வினை தீர்த்தோன் தானும்
வெண்காட்டிற் சிவந்ததிரு மெய்யன் தானும்
வாளுரும் விழியாள்மூ காம்பி (யென்னு)
மலைமகளு மறுபுறமே மணங்குங் கஞ்சத்
தாளுருங் காழிமலைச் சிகரத் துச்சி
தனிலு(றை யுஞ்)சட்டை நாதன் றானே. 18

கண்ணனுக்குச் சக்கரமன் றளித்தோன் றானும்
கா(ண்பார்க்குக் கற்)பனையிற் கனிதந் தோனும்
மண்ணுலகும் விண்ணுலகும் இறந்தி டாமல்
வந்த(விடத் தினை யி)நந்தா யருந்து வோனும்
வெண்ணகையால் வெண்ணகையை யெரித்தோன் (தானும்)
(விண்ணரக்கர் பொ)டியாக விழித்தோன் தானும்
தண்ணளிசேர் காழிமலைச் சிகரம் மேவும்
தமிழ்(வடுகன் த)மிழ்ச்சட்டை நாதன் றானே! 19

ஒராவுண்ட கன்றுதனக் காகச் சோழ(ன்
மா)மதலை தனைத்தேரி லூர்வித் தோனும்
அராவுண்ட வணிகனுயிர் தருவித் தோ(னும்)
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னோனும்
கராவுண்ட பிள்ளையமீ ளழைப்(பித்) தோனும்
கனல்மழுவைத் தரித்தோனும் கனஞ்சூ ழூழ்ந்
தராவுண்ட தி(ருத்)தோணி மலையில் வாழும்
தமிழ்வடுகன் தமிழ்ச்சட்டை நாதன் றானே! 20

கொ(ந்தா)ருங் கடுக்கைமலர்த் தொடையன் தானும்
கோகனகத் தயன்றலையைக் (கொய்)தோன் தானும்
எந்தாயு மெந்தந்தை தானு மாகி
என்குறைதீர்த் தெனைக்கா(க்கு) மிறையன் தானும்
சிந்தாகுல மகற்றிவரங் கொடுக்குந் தெய்வ
சிகாமணி தெய்வரா(யன் என்போன் தானும்)
தந்தாவள முரித்ததனைப் போர்த்தோன் தானுஞ்
சண்பைமலைத் தமிழ்ச்சட்டை நாதன் றானே! 21

கட்டளைக்கலித்துறை

உனையே நினைந்துனக் குத்தொண்டு பட்டு மனைத்துதித்தும்
பினையே யொருவர்க் கிதஞ்சொ(ல்லி வாழ்வ)தென் பேதைமையே
நினையேயல் லாதொரு தெய்வமுண் டோ விந்த நீணிலத்தி
(லுனையடைந் தேன்)சட்டை நாதா அருதித் தயாபரனே! 22

வினையே யகற்ற மிடிதீர்க்க மெய்ப்பொரு (ளேகொடுக்க)
உனையேயல் லாதொரு தெய்வமுண் டோவுண்ட தாகிலதை
நினையேன் நினைக்கிலும் நீயாகத் தோன்றும் நினைத்ததெல்லாம்
தனையே நிகர்சட்டை நாதா அருதித் தயாபரனே! 23

பூணே னுனது புகழன்றி நின்பொன் னுருவமன்றிக்
காணே னெனது விழியிற் கமல(ச்செம் பாத)மன்றி
ஊணே னுளத்தி லுனதடி யார்க்கன்றி யுட்குழைந்(து)
(கோணேன் புகழ்கொள் தமிழ்ச்)சட்டை நாத குருபரனே! 24

விருத்தம்

அக்கரமா யாபதொத் தாரணமு (மாகி
அகோரக்குரு ரூப)மாகிச் (சோதி யாகி)

சக்கிரவா ரத்தில்வந்து தொழுவோர்க் கெல்லாந்
துயரகற்றி வ(ரங்கொடுக்குஞ் சோதி யானே)
உக்கிரமா கியபூத வேதா ளங்கள்
உரங்குலையச் சூலத்தா லூன்று வானுஞ்
(சக்கரமா லுக்கிதமா யளித்தோன்) ருனுஞ்
சண்பைமலைத் தமிழ்ச்சட்டை நாதன் தானே! 25

சட்டைக்கலித்துறை.

தா(யேயல் லாது தனையேற்கு) வேறொரு தாணுவுண்டோ
நீயேயல் லாது தமியேற்கு வேறு நி(லையொன்றுண்டோ)
நீயே யகிலமு மாயே யடியர் நினைத்தநினை
வாயே யிருக்குந் தமி(ழ்க்காழி யாபதொத் தாரண)னே! 26

இருபோது மன்றி யொருபோது மெத்துய ரெய்திடினு
(மொருபோது முன்னை) மறவாத நேயமு காந்தம்பொங்கி
வருபோது மெய்த்திருத் தோ(ணியின் மேல்கொண் டடிய) ருய்யத்
தருபோதன் காழி மலைச்சட்டை நாத தயாபரனே! 27

(வருமோ வினைகள் வராது)வந் தாலும் வருத்தஞ்சற்றும்
தருமோ தராது சலசமம் போலவுந் (தான்மருவும்
பெருமோகச் சங்கக்) குழைக்காத னன்பர் பிழைபொறுத்தோன்
அருள்மேவு காழி (மலைச்சட்டை நாத னடியவர்க்கே! 28

சட்டைநாதர் தோத்திரம் முற்றும்.

PATHYĀPATHYAM

(Food, Prescribed and Proscribed)

Part III

By

VAIDYA VISARADA

C. RAJARAJESVARA SARMA,

Assistant Research Officer, Literary Research Unit,
Central Council for Research in Indian Medicine & Homeopathy,
Sarasvati Mahal, Thanjavur.

(Formerly Professor & Physician of
Sri Venkataramana Ayurvedic College & Dispensary, Madras)

Published By

Vidvan A. VADIVELAN,

Honorary Secretary,

FOR THE ADMINISTRATIVE COMMITTEE OF
THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

Śaka 1897 | Price Re. 1—00 | A. D. 1975

பத்தியமும் அபத்தியமும்

மூன்றும் பாகம்

ஆசிரியர்:
வைத்திய விசாரத
சி. இராஜராஜேச்வர சர்மா,
உதவி ஆராய்ச்சியாளர், நூல் ஆராய்ச்சித்துறை,
மத்திய இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆராய்ச்சிக் கழகம்,
சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.
(முன்னாள் வெங்கட்ரமண ஆயுர்வேத கலாசாலை ஆசிரியரும்
ஷை வைத்தியசாலை வைத்தியரும்)

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலைய நிர்வாகக் குழுவிற்காக
கௌரவ காரியதரிசி
வித்துவான் **அ. வடிவேலன் அவர்களால்**
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகம், ஸ்ரீரங்கம்.

சகம் 1897 விலை ரூ. 1—00 கி. பி. 1975

PREFACE

This is the seventh of the series of pamphlets on Health and Hygiene published through our Library Journal and released as off-prints. Two of the six earlier tracts, entitled Ayurvedopadesa, dealt with the rules of healthy life to be observed in one's daily routine, one entitled Garbhini Raksa, with the rules of maternity, and the other called Kaumara Bhrtya, with the care of children. This topic Pathyapathya is meant to setforth, at a practical level, the basic principles of food and nutrition elaborating on the healthy and the unhealthy qualities of the several articles of food and drink in common usage. The first part of this book dealing with grains, pulses, varieties of meat and fruits was published in 1972. The second part devoted to vegetables, edible roots, greens etc., was published in 1974. The third part is devoted to liquids like water, milk, curd etc.

The treatment of the topics by Vaidya Visarada, Thiru C. Rajarajesvara Sarma, is as authoritative as it is simple and clear. The quotations from the standard classics of Ayurveda make the compilation authoritative and the lucid exposition of the subject matter in easy Tamil brings the classical knowledge within the easy reach of even laymen. The work being the first of its kind, the author deserves our sincere thanks for his service and our hearty congratulations on his achievement. We have no doubt that, like the previous booklets of this series, this one also will be heartily welcomed.

THANJAVUR,
20—3—1975.

A. VADIVELAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

|| श्रीरस्तु ||

முன்னுரை

षट्त्रिंशतं सहस्राणि रात्रीणां हितभोजनः ।
जीवत्यनातुरो जन्तुः ... ... || — चरकसंहिता

"இதமான உணவை உட்கொள்ளும் மனிதன் முப்பத்தாறுயிரம் இரவுகள் (நூறு வருடங்கள்) நோயற்றவனாக வாழ்கிறான்" என்னும் சரகாசார்யரின் பொன்மொழி இதமான உணவின் பெருமையை எடுத்துக் கூறுகின்றது.

ஆகவே அவரவர் நிலைக்கேற்ற உணவையே தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதற்குதவுமாறு உணவுப்பொருள்களின் குணங்களை விளக்கும் பகுதிகளை ஆயுர்வேத நூற்களான சரகஸம்ஹிதா, ஸுச்ருதஸம்ஹிதா, முதலிய பழைய நூல்களிலிருந்தும், பாவப்பிரகாசம், சாலிக்கிராமநிகண்டு போன்ற நவீன நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து, ஒன்றுகூட்டி, வரிசைப் படுத்தி, எல்லோருக்கும் பயன்படுமாறு விரிவான மொழிபெயர்ப்புடன் "பத்தியாபத்தியம்" என்ற பெயரால் வெளியிடக்கருதி இதனை எழுதலானேன். இதன் முதல் இரண்டு பகுதிகள் முன்பே வெளியிடப் பட்டுள்ளன.

இந்நூலின் மூன்றும் பகுதியை இப்பொழுது பேரன்புடன் வெளியிட்டுதவிய தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூலக காரியதரிசி உயர்திரு. வித்துவான் அ. வடிவேலன் அவர்களுக்கும், மேற்படி நூலக உதவிக் காப்பாளர் உயர்திரு. ம. சீராளன், B. A., அவர்களுக்கும், இதைத் தொகுப்பதில் பெரிதும் வழிகாட்டி ஊக்குவித்துதவிய எனது குரு உயர்திரு. வி. எஸ். வெங்கடசுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும், தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட எனக்கு இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பில் உதவிபுரிந்த நண்பர் புலவர் திரு. எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்.

சி. ராஜராஜேச்வர சர்மா.

॥ श्रीरस्तु ॥

॥ पथ्यापथ्यम् ॥

(तृतीयो भागः)

பத்தியமும் அபத்தியமும்

(மூன்றாம் பாகம்)

वन्देऽमृतधरं देवमात्रेयादीन्महात्मनः ।
"वैद्यरत्नं" गुरुं च श्रीकृष्णवारियराह्वयम् ॥

காங்கோதகத்தின் குணம் —

जीवनं तर्पणं हृद्यं ह्लादि बुद्धिप्रबोधनम् ।
तन्वव्यक्तरसं मृष्टं शीतं शुच्यमृतोपमम् ॥

सूर्योद्धृतप्रमुक्तत्वाल्लघु वातकफापहम् ।
शैत्यजीवनसौम्यत्वैः पित्तरक्तविषार्तिजित् ॥

गङ्गाम्बु नभसो भ्रष्टं ... ... । — अष्टाङ्गसंग्रहः

காங்கோதகம் (ஆகாயத்திலிருந்து பொழிந்த மழைத் தண்ணீர் 'காங்கோதகம்,' எனப்படும்.) ஓஜஸ்ஸை (நம் உடம்பிலுள்ள ஏழு தாதுக்களுடைய சாரமான உயிர்ப் பொருள்) விருத்திசெய்கிறது. உடல் வாட்டத்தைப் போக்குகிறது. இதயத்திற்கு பலத்தைத் தருகிறது. மனக் களிப்புண்டாக்குகிறது. புத்தி சக்தியை வளர்க்கிறது. நிர்மலமானது, உணரமுடியாத சுவையுள்ளது. பருகுவதற்கு இன்பமானது. குளுமையானது பவித்திரமானது, அமிருதத்திற்கு ஒப்பானது. இந்தத் தண்ணீர் சூரியனால் ஆவிரூபமாக எடுக்கப்பட்டு மழைத் தண்ணீராக விடப்பட்டு இருப்பதால் இலகுவானது, வாயு, கபம், இவைகளைப் போக்குகிறது. இது குளிர்ந்திருப்பதாலும், ஓஜஸ்ஸை விருத்திசெய்யும் குணமுடையதானதாலும், குளுமை செய்யும் இயல்புடையதானதாலும் பித்ததோஷம், இரத்ததோஷம், விஷதோஷம் இவைகளைப் போக்குகிறது.

— அஷ்டாங்கஸங்கிரஹம்

காங்கோதகத்தை சேகரிக்கும் முறை—

மழைக் காலத்தில் மழை பெய்யும்போது முதல் ஒன்றிரண்டு தினங்கள் கழிந்தபிறகு, புழுதி, புகை, பூச்சி முதலியவைகள் அடங்கிய பின்பு பெய்யும் மழைத் தண்ணீரை ஆகாயத்திலிருந்து பெய்யும்போதே சுத்தமான துணிவழியாக சுத்தமான பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

காங்கோதகத்தை பரிசோதனை செய்யும் முறை—

येनाभिवृष्टममलं शाल्यन्नं राजतस्थितम् ।
अक्लिन्नमविवर्णं वा तत्पेयं गाङ्गमन्यथा ॥

सामुद्रं तन्न पातव्यं मासादाश्वयुजाद्विना । — अष्टाङ्गसंग्रहः

எந்த மழைத் தண்ணீர் பெய்வதால் வெள்ளிப் பாத்திரத்திலுள்ள வெண்மையான சம்பா அரிசியின் சாதம் நொசவுதட்டி நொந்து போகாமலும் நிறமாற்றமடையாமலும் இருக்குமோ அந்த மழைத் தண்ணீர் தான் காங்கோதகம் ஆகும். அதுதான் குடிப்பதற்குத் தகுந்தது. வெள்ளிப் பாத்திரத்திலுள்ள அன்னம் மேல்கூறியபடி இல்லாவிட்டால் அந்த மழைத் தண்ணீர் ''ஸாமுத்ரம்'' எனப்படும். அவ்விதமான மழைத் தண்ணீரை ஐப்பசி மாதத்தைத் தவிர்த்து மற்ற காலங்களில் குடிக்கக்கூடாது.

காங்கோதகத்திற்கு ஒப்பான தண்ணீர் —

दिवार्ककिरणैर्जुष्टं निशायामिन्दुरश्मिभिः ।
अरूक्षमनभिष्यन्दि तत्तुल्यं गगनाम्बुना ॥ — सुश्रुतसंहिता

பகலில் கதிரவனின் கதிர்களாலும், இரவில் சந்திரனின் கதிர்களாலும் தொடப்பட்ட தண்ணீரானது வறட்சியையும், கபத்தையும் உண்டாக்குவதல்ல. இந்தத் தண்ணீர் காங்கோதகத்திற்கு ஒப்பானது.
— ஸுச்ருதஸம்ஹிதா

சந்திரகாந்தக் கல்லிலுண்டாகும் தண்ணீரின் குணம் —

रक्षोघ्नं शीतलं ह्लादि ज्वरदाहविषापहम् ।
चन्द्रकान्तोद्भवं वारि पित्तघ्नं विमलं स्मृतम् ॥ — सुश्रुतसंहिता

दृष्टिमेधावपुःस्थैर्यकरं स्वादु हिमं लघु । — अष्टाङ्गसंग्रहः

சந்திரகாந்தக் கல்லில் உண்டாகும் தண்ணீர்—கிரஹதோஷத்தைக்

கண்டிக்கும், குளிர்மையானது, மனதுக்கு இன்பமூட்டுவது; சுரம், எரிச்சல் விஷதோஷம், பித்தம் ஆகியவற்றைப் போக்கும். சுத்தமானது.

— ஸுச்ருதஸம்ஹிதா

பார்வை, அறிவு, உடல்வலிமை இவற்றை உண்டுபண்ணும், இனிப்பானது, குளிர்மையானது. எளிதில் சீரணமாகக்கூடியது.

— அஷ்டாங்கஸங்கிரஹம்

மழைத் தண்ணீரின் குணம் —

वार्षिकं तदहर्वृष्टं भूमिस्थमहितं जलम् ।
त्रिरात्रमुषितं तत्तु प्रसन्नममृतोपमम् ॥ — भावप्रकाशः

அன்றே பெய்ததும், தரையில் இருப்பதுமான மழைத் தண்ணீர் இதமானதல்ல. மூன்று நாட்கள் கடந்தபின்பு தெளிவடைந்த அதே மழைத் தண்ணீர் அமுதத்திற்கு ஒப்பானது. — பாவப்பிரகாசம்

ஆற்றுநீரின் குணம் —

नादेयमुदकं रूक्षं वातलं लघु दीपनम् ।
अनभिष्यन्दि विशदं कटुकं कफपित्तनुत् ॥ — भावप्रकाशः

ஆற்றுநீர்—வறட்சி, வாயு இவற்றை உண்டாக்கும். எளிதில் சீரணமாகும். பசித்தீயைத் தூண்டும். கபத்தை இளக்கக்கூடியது அல்ல. தெளிவானது. கார்ப்புச் சுவையுடையது. கபம், பித்தம் ஆகியவற்றைக் கண்டிக்கிறது. — பாவப்பிரகாசம்

குளத்து நீரின் குணம் —

ताडाकमुदकं स्वादु कषायं कटुपाकि च ।
वातलं बद्धविण्मूत्रमसृक्पित्तकफापहम् ॥ — भावप्रकाशः

குளத்தின் நீர் — இனிப்பு, துவர்ப்பு இந்தச் சுவைகளை உடையது. சீரணமான பின்பு கார்ப்புச் சுவையைக் கொண்டது. வாயுவை உண்டாக்கும். மலம், மூத்திரம் இவற்றைத் தடுக்கும். இரத்த பித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக இரத்தம் கசிதல்) கபம் இவற்றைப் போக்குகிறது.

— பாவப்பிரகாசம்

கிணற்று நீரின் குணம் —

कौपं पयो यदि स्वादु त्रिदोषघ्नं हितं लघु ।
तत्क्षारं कफवातघ्नं दीपनं पित्तकृत्परम् ॥ — भावप्रकाशः

கிணற்று நீர் — இனிப்பாக இருந்தால் மூன்று தோஷங்களையும் கண்டிக்கிறது. இதமானது. எளிதில் சீரணமாகக்கூடியது. கார்ப்புச் சுவை உடையதாக இருந்தால் கபம், வாயு இவைகளைக் கண்டிக்கும். பசித்தீயைத் தூண்டும். பித்தத்தை அதிகப்படுத்தும். —பாவப்பிரகாசம்

வயல் நீரின் குணம்—

कैदारं वार्यभिष्यन्दि मधुरं गुरु दोषकृत् । — भावप्रकाशः

வயல் நீர் — கபத்தை உண்டாக்கும். இனிப்பானது. எளிதில் சீரணமாகக்கூடியது அல்ல. இதமானதல்ல. — பாவப்பிரகாசம்

நீர்வீழ்ச்சி நீரின் குணம்—

नैर्झरं रुचिकृन्नीरं कफघ्नं दीपनं लघु ।
मधुरं कटुपाकं च वातलं स्यादपित्तलं ॥ — भावप्रकाशः

நீர்வீழ்ச்சியின் நீர் — ருசியை உண்டாக்குகிறது. கபத்தைக் குறைக்கிறது. பசித்தீயைத் தூண்டுகிறது. எளிதில் சீரணமாகக்கூடியது. இனிப்பானது. சீரணமானபின்பு கார்ப்புச் சுவையை உடையது வாயுவை உண்டாக்கும். பித்தத்தை அதிகப்படுத்துவதல்ல. — பாவப்பிரகாசம்

கடல் நீரின் குணம்—

विस्रं त्रिदोषं लवणमम्बु यद्वरुणालये । — चरकसंहिता

கடல் நீர் — நாற்றமுடையது. வாயு, பித்தம், கபம் இம்மூன்று தோஷங்களையும் கிளப்பிவிடும். உப்புச்சுவை உடையது. —சரகஸம்ஹிதா

குளிர்ந்த நீரின் குணம்—

शीतं मदात्ययग्लानिमूर्छाच्छर्दिश्रमभ्रमान् ।
तृष्णोष्णदाहपित्तास्रविषाण्यम्बु नियच्छति ॥ — अष्टाङ्गहृदयम्

குளிர்ந்த நீரானது — மதாத்யயம் (அளவு மீறிய மதுபானத்தால் உண்டாகும் மயக்கம்) உடல் வாட்டம், மூர்ச்சை, வாந்தி, ஓய்ச்சல், தலைச்சுற்றல், தண்ணீர்த்தாகம், உஷ்ணம், எரிச்சல், இரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்கால்புகள் இவைகளின் வழியாக இரத்தம் கசிதல்), விஷவேகம் இவற்றைப் போக்குகிறது. — அஷ்டாங்கஹிருதயம்

குளிர்ந்த நீரைப் பருகத்தகாதவர்கள்—

पार्श्वशूले प्रतिश्याये वातरोगे गलग्रहे ।
आध्माने स्तिमिते कोष्ठे सद्यः शुद्धे नवज्वरे ।

हिक्कायां स्नेहपीते च शीताम्बु परिवर्जयेत् ॥ — सुश्रुतसंहिता

பக்கவலி, ஜலதோஷம், வாதநோய், தொண்டைக்கட்டு, வயிற்றுப் பொருமல், அசீரணம், ஏழு நாட்களுக்கு உட்பட்ட சுரம், விக்கல் இவற்றையுடையவர்களும், வாந்தியாவதற்கோ, பேதியாவதற்கோ மருந்தை உட்கொண்டவர்களும், எண்ணெய், நெய் முதலியவற்றைக் குடித்தவர்களும் குளிர்ந்த நீரைப் பருகக்கூடாது. — ஸுச்ருதஸம்ஹிதா

கொதித்து சூடாக இருக்கும் நீரின் குணம் —

दीपनं पाचनं कण्ठ्यं लघूष्णं वस्तिशोधनम् ।
हिध्माध्मानानिलश्लेष्मसद्यः शुद्धौ नवज्वरे ॥

कासामपीनसश्वासपार्श्वरुक्षु च शस्यते । — अष्टाङ्गहृदयम्

கொதித்து சூடாக இருக்கும் நீர் — இலேசானது. பசித்தீயைத் தூண்டுகிறது. உட்கொள்ளப்பட்ட ஆகாரத்தைச் சீர்ணம் செய்யவல்லது. தொண்டைக்கும் நலம் செய்யும். மூத்திரப்பையைச் சுத்தம் செய்யும். மூத்திரத்தை தாராளமாக வெளிப்படுத்தும். விக்கல், வயிற்றுப்பொருமல், வாதரோகங்கள் (உடம்பில் வலி, பிடிப்பு முதலியவை), கபரோகங்கள் (உடம்பில் வீக்கம், குளிர்ச்சி, அரிப்பு, சோம்பல் முதலியவை), ஏழு நாட்களுக்கு உட்பட்ட சுரம், இருமல், அசீரணம், ஜலதோஷம், மூச்சுத் திணறல் (Asthma), பல்வலி இவற்றில் உபயோகிக்கச் சிறந்தது. அப்பொழுதே வாந்தியாவதற்கோ, அல்லது பேதியாவதற்கோ மருந்தைச் சாப்பிடுவதால் வாந்தியோ அல்லது பேதியோ அடைந்தவர்களுக்கும் உபயோகிக்கச் சிறந்தது. — அஷ்டாங்கஹிருதயம்

கொதித்து ஆறிய நீரின் குணம் —

अनभिष्यन्दि लघु च तोयं क्वथितशीतलम् ।
पित्तयुक्ते हितं दोषे व्युषितं तत्त्रिदोषजित् ॥ — अष्टाङ्गहृदयम्

கொதித்து ஆறிய நீர் — கபத்தை உண்டாக்குவதில்லை. சுகமாக சீரணமாகும். பித்தசம்பந்தமுள்ள நோய்களில் இதமானது. ஒருநாளுக்கு மேற்பட்டால் இது மூன்று தோஷங்களையும் கிளப்பிவிடும்.

— அஷ்டாங்கஹிருதயம்

கொதித்து ஆறிய நீரைப் பருகத்தக்கவர்கள் —

दाहातीसारपित्तासृङ्मूर्च्छामद्यविषार्तिषु ।
शृतशीतं जलं शस्तं तृष्णाच्छर्दिभ्रमेषु च ॥ — सुश्रुतसंहिता

கொதித்து ஆறிய நீர் — எரிச்சல், பேதி, இரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்காம்புகள் இவைகளின் வழியாக இரத்தம் கசிதல்), மயக்கம், இந்த நோய்கள் உள்ளவர்களுக்கும், மதுபானம் செய்தவர்களுக்கும், விஷதோஷம் உடையவர்களுக்கும் ஏற்றது. தண்ணீர்த்தாகம், வாந்தி, தலைச்சுற்றல் இந்த நோய்களிலும் சிறந்தது.

— ஸுச்ருதஸம்ஹிதா

எவ்விதமான நீரையும் பருகக்கூடாதவர்கள்—

नाम्बु पेयमशक्त्या वा स्वल्पमल्पाग्निगुल्मिभिः ।
पाण्डूदरातिसारार्शोग्रहणीदोषशोथिभिः ॥

प्रक्लिन्नदेहमेहाक्षिगलरोगव्रणातुराः ।
पानं त्यजेयुः ... ... ॥ — अष्टाङ्गहृदयम्

பசித்தீ வளர்ச்சிக் குறைவாக உள்ளவரும், குல்மம் (Abdominal Tumour), பாண்டு (சோகை Anaemia), உதரரோகம் (Ascites), பேதி, மூலரோகம் (Piles), கிரஹணிரோகம் (நீடித்த பேதி), வீக்கம் இந்த நோய்கள் உள்ளவரும் எவ்விதமான நீரையும் பருகக்கூடாது. இவர்களுக்கு நாவரட்சி அடக்கமுடியாவிட்டால் இவர்கள் சொற்ப அளவில் தான் தண்ணீரைக் குடிக்கலாம்.

வியர்வை அதிகமாக உள்ளவர்களும், நீரிழிவு நோய் (Diabetes), கண் நோய், தொண்டை நோய், புண் இவை உள்ளவர்களும் எவ்வித மான நீரையும் குடிக்கக்கூடாது. — அஷ்டாங்கஹிருதயம்

(இவர்களும் தண்ணீர்த் தாகத்தை அடக்கமுடியாவிட்டால் சொற்ப மாகத்தான் தண்ணீரைக் குடிக்கவேண்டும். இவர்கள் அந்தந்த நோயைப் போக்கும் மருந்துச்சரக்குகள் சேர்த்துக் கொதிக்கவைத்த நீரைக் குடிப்பது மிகவும் நல்லது.)

நீரைக் கொதிக்கவைக்கும் முறை—

अपिधानमुखे पात्रे जलं दुर्जलतां व्रजेत् ।
तस्मादावरणं त्यक्त्वा क्काथादीनां विनिश्चयः ॥ — शार्ङ्गधरसंहिता

மூடிவைக்கப்பட்ட பாத்திரத்தில் கொதித்த நீர் கெட்டுப்போகிறது. ஆகையால் மூடிவைக்காமலேயே கஷாயம், நீர் முதலியவற்றைக் கொதிக்க வைக்கவேண்டும். —சார்ங்கதரஸம்ஹிதா

(தூசி முதலியவை விழாமல் இருப்பதற்குப் பாத்திரத்தின் வாயைச் சுத்தமான துணியால் மூடி கட்டிவைக்கலாம்.)

கொதித்து ஆறிய நீரை மறுபடியும் சுடவைக்கக் கூடாது —

पानीयं वा पुनस्तप्तं विषवद्धन्ति मानवम् । — चिकित्सातिलकम्

கொதித்து ஆறிய கஷாயத்தை அல்லது நீரை மறுபடியும் சுட வைத்துக் குடிப்பது மனிதனை விஷம்போல் பாதிக்கும். —சிகித்ஸாதிலகம்

ஜீரணமாகாத கொதித்த நீர்—

दिवा शृतं तु यत्तोयं रात्रौ तद्गुरुतां व्रजेत् ।
रात्रौ शृतं दिवा तद्वद्गुरुत्वमधिगच्छति ॥ — योगरत्नाकरः

பகலில் கொதிக்கவைத்த நீர் இரவில் எளிதில் சீரணமாகாத நிலையை அடைகிறது. அவ்வாறே இரவில் கொதிக்கவைத்த நீர் பகலில் எளிதில் சீரணமாகாத நிலையை அடையும். —யோகரத்னாகரம்

நீர் சீரணமாகும் நேரம் —

पीतं जलं जीर्यति यामयुग्माद्यामैकमात्राच्छृतशीतलं च ।
तदर्धमात्रेण शृतं कदुष्णं पयः प्रपाके त्रय एव कालाः ॥ — भावप्रकाशः

குளிர்ந்த நீர் ஆறு மணி நேரத்தில் சீரணமாகிறது. கொதித்து ஆறிய நீர் மூன்று மணி நேரத்தில் சீரணமாகின்றது. கொதித்து இளம் சூடாக இருக்கும் நீர் ஒன்றரை மணி நேரத்தில் சீரணமாகிறது. —பாவப்பிரகாசம்

சாப்பிடும் சமயத்தில் தண்ணீர் பருகுவதின் குணம்—

समस्थूलकृशा भुक्तमध्यान्तप्रथमाम्बुपाः । — अष्टाङ्गहृदयम्

சாப்பாட்டின் நடுவில், இறுதியில், முதலில் தண்ணீர்க் குடிப்பவர்கள் முறையே சமநிலையில் உள்ள உடலையுள்ளவர்களாகவும், பருத்த உடலைக் கொண்டவர்களாகவும், இளைத்த உடம்பையுடையவர்களாகவும் ஆகின்றனர். — அஷ்டாங்கஹிருதயம்

இரவில் தண்ணீர் குடிப்பது—

पिबेद् घटसहस्राणि यावन्नास्तमितो रविः ।
अस्तं गते दिवानाथे बिन्दुरेको घटायते ॥

சூரியன் மறைவதற்கு முன்பு (பகலில்) ஆயிரம் குடங்கள் தண்ணீரைப் பருகலாம். சூரியன் மறைந்தபின்பானாலோ (இரவில்) ஒரு சொட்டுத் தண்ணீரும் ஒரு குடம் தண்ணீருக்குச் சமமாகின்றது.

இரவில் தண்ணீரை மிகக் குறைந்த அளவில்தான் பருகவேண்டு மென்பது பொருள்.

தண்ணீர் பருகுவதில் நியமங்கள் —

पानीयं न तु पानीयं पानीयेऽन्यप्रदेशजे ।
अजीर्णे क्वथितं चामे पक्के जीर्णेऽपि नेतरत् ॥ — अष्टाङ्गसंग्रहः

ஓரிடத்துத் தண்ணீர் சீரணமாகாமலிருக்கும்போது மற்றொரு இடத்து தண்ணீரைக் குடிக்கக் கூடாது. (கிணற்று நீரைக் குடித்து அது சீரண மாவதற்கு முன்பே ஆறு, குளம் முதலியவைகளின் நீரைப் பருகக்கூடாது. குளிர்ந்த நீர் சீரணமாகாமலிருக்கும்போது கொதித்த நீரையும் குடிக்கக் கூடாது. கொதித்த நீரைக் குடித்து அது சீரணமாகியபின்பும் அடுத்த வேளையில் சாப்பிடுவதற்கு முன்பே குளிர்ந்த நீரைப் பருகக்கூடாது.

(தண்ணீரை மாற்றி மாற்றிக் குடிப்பதால் ஜலதோஷம், தொண்டைக் கட்டு, இருமல், மூச்சுத் திணறல், தலைவலி முதலிய நோய்கள் உண்டாக இடமுண்டு.) — அஷ்டாங்கஸங்கிரஹம்

தண்ணீரைச் சேமிப்பதற்கேற்ற காலம்—

भौमानामम्भसां प्रायो ग्रहणं प्रातरिष्यते ।
शीतत्वं निर्मलत्वं च यतस्तेषां मतो गुणः ॥ — भावप्रकाशः

கிணறு, குளம் முதலியவற்றிலிருந்து தண்ணீரைக் காலை நேரத்தில் சேமித்து வைப்பது சிறந்த முறை. காலை நேரத்தில்தான் அவ்விடத்தில் தண்ணீர் குளிர்ச்சியுள்ளதாகவும், தெளிவாகவும் இருக்கின்றது.

— பாவப்பிரகாசம்

தண்ணீர் குடிப்பதற்கேற்ற பாத்திரங்கள் —

सौवर्णे राजते ताम्रे कांस्ये मणिमयेऽपि वा ।
पुष्पावतंसं भौमे वा सुगन्धि सलिलं पिबेत् ॥ — सुश्रुतसंहिता

தங்கம், வெள்ளி, செம்பு, வெங்கலம், மணி, மண் இவைகளால் செய்யப்பட்ட பாத்திரத்தில் மலர்களுடன் கூடியதும், நல்ல மணத்தை உடையதுமான தண்ணீரைக் குடிக்கவேண்டும். — ஸுச்ருதஸம்ஹிதா

தண்ணீரைக் குடித்தவுடனே செய்யக்கூடாதவை —

... ... सर्वश्च भाष्याध्वशयनं त्यजेत् ।
पीत्वा भुक्त्वातपं वह्निं यानं प्लवनवाहनम् ॥ — अष्टाङ्गहृदयम्

அனைவரும் சாப்பிட்ட உடனேயும், தண்ணீர் முதலிய திரவமான பொருட்களைக் குடித்த உடனேயும் பேசுவது, படிப்பது, வெயிலில் இருப்பது, நெருப்பின் அருகில் நிற்பது, வண்டியில் செல்வது, நீந்துவது, குதிரை முதலியவற்றின் மேல் சவாரிசெய்வது இவைகளைச் செய்யக்கூடாது.

—அஷ்டாங்கஹிருதயம்

தண்ணீர் முதலிய திரவமான பொருட்களைக் குடித்த உடனேயும், சாப்பிட்ட உடனேயும், உடம்புக்கு ஓய்ச்சலைக் கொடுக்கக்கூடிய மேல் கூறிய வேலைகளைச் செய்வதால் வயிற்றில் அயர்ச்சி உண்டாகி முக்கியமாக, வாந்தி, வயிற்றுவலி, அந்திரவிருத்தி (Hernia), குல்மம் (Abdominal Tumour), மூலம் (piles) முதலிய வியாதிகள் உண்டாக இடமுண்டு.

பசித்தவன் தண்ணீர் பருகக் கூடாது—

तृषितस्तु न चाश्नीयात् क्षुधितो न पिबेज्जलम् ।
तृषितस्तु भवेद्गुल्मी क्षुधितस्तु जलोदरी ॥ — भावप्रकाशः

தாகம் கொண்டவன் உடனே சாப்பிடுவது கூடாது. பசித்தவன் தண்ணீர் குடிப்பதும் கூடாது. தாகம் கொண்டவன் சாப்பிடுவதால் குல்மநோய் (வயிற்றில் உண்டாகும் ஒருவித கட்டி—Abdominal Tumour) உண்டாகிறது. பசித்தவன் தண்ணீரைக் குடிப்பதால் ஜலோதர வியாதி (வயிற்றில் நீர்க்கோர்வை (Ascites) உண்டாகிறது. —பாவப்பிரகாசம்

அலைச்சலை அடைந்த உடனே தண்ணீர் குடிப்பது கூடாது—

श्रमात्तु भोजनं यो हि पानं वा कुरुते नरः ।
ज्वरः सञ्जायते तस्य छर्दिर्वा तत्क्षणाद्भवेत् ॥ —आत्रेयसंहिता - स्वस्थवृत्तसमुच्चयः

வழிநடப்பது, வெயிலில் சுற்றுவது, வேலை செய்வது முதலியவற்றால் ஓய்ச்சலை அடைந்த மனிதன் உடனே சாப்பிடுவதாலும், அல்லது தண்ணீர் குடிப்பதாலும் சுரம் அல்லது வாந்தி விரைவில் உண்டாகிறது.

(ஆகையால் சிறிது நேரம் கழிந்த பின்னர் சாப்பிடுவதோ, நீரைக் குடிப்பதோ செய்யவேண்டும்.)

—(ஆத்ரேய ஸம்ஹிதா—ஸ்வஸ்தவ்ருத்தஸமுச்சயம்)

பயன்படுத்தத் தகாத தண்ணீர்—

कीटाहिमूत्रविट्कोथतृणजालोत्कराविलम् ।
पङ्कपङ्कजशैवालहठपर्णादिसंवृतम् ॥

सूर्येन्दुपवनादृष्टं जुष्टं च क्षुद्रजन्तुभिः ।
अभिवृष्टं विवर्णं च कलुषं स्थूलफेनिलम् ॥

विरसं गन्धवत्तप्तं दन्तग्राह्यतिशैत्यतः ।
तद्वर्जयेत् ... ... ॥

तत्कुर्यात्स्नानपानाभ्यां तृष्णाध्मानोदरज्वरान् ।
कासाग्निसादाभिष्यन्दकण्डूगण्डादिकान् ... ॥ — अष्टाङ्गसंग्रहः

கிருமி, பாம்பு இவைகளின் மலம், மூத்திரம், அழுகிய பொருள், புல், குப்பை இவைகளால் கலங்கியதும், சேறு, தாமரைப்பூ, பாசி, அந்தரத்தாமரை (ஆகாசத்தாமரை) இலை இவைகளால் நிறைந்ததும்; சூரியன், சந்திரன், இவர்களால் பார்க்கப் படாததும், வாயுவினால் தொடப் படாததும், சிறிய கிருமிகளுடன் கூடியதும், புதிதாக பூமியில் பெய்ததும், கலங்கி இருப்பதும், நிறமாற்றம் கொண்டதும், மிகவும் நுரையுடன் கூடியதும், கெட்ட சுவை உள்ளதும், நாற்ற முடையதும், வெயிலினால் கொதித்ததும், குளிர்ச்சியினால் பற்களைக் கட்டுவதுமான தண்ணீரைக் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் உபயோகிக்கக் கூடாது.

குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தகாத நீரை உபயோகிப்பதால் தண்ணீர்த்தாகம், பொருமல், உதரம் (வயிற்றில் வீக்கம் நீர்க்கோர்வை முதலியவைகளுடன் கூடிய நோய்) என்னும் நோய், சுரம், இருமல், பசித்தீ குறைவு, கண்நோய், அரிப்பு, கட்டி, இவைகள் உண்டாகின்றன.

—அஷ்டாங்க ஸங்கிரஹம்

அசுத்தமாக இருக்கும் நீரைச் சுத்தமாகச் செய்யும் முறை –

घनवस्त्रपरिस्रावैः क्षुद्रजन्त्वभिरक्षणम् ।
स्थापनस्यास्य तपनमग्न्यर्कायसपिण्डकैः ॥ — अष्टाङ्गसंग्रहः

சிறிய கிருமிகளுடன் கூடிய நீரைக் கெட்டியாக இருக்கும் துணியால் பலமுறை வடிகட்டி கிருமிகளை நீக்கி சுத்தமாகச் செய்யவேண்டும். கெட்ட நீரைக் கொதிக்கவைத்தும் அல்லது வெயிலில் வைத்து சுடவைத்தும் அல்லது சுடவைத்த இரும்புக்கட்டிகளை நீரில் முழுகச்செய்தும் சுத்தம் செய்ய வேண்டும்.

— அஷ்டாங்க ஸங்கிரஹம்

கலங்கி இருக்கும் நீரைத் தேற்றான் கொட்டையைச் சேர்த்து தெளிய வைக்கலாம். விஷக்கிருமிகளின் மலம், மூத்திரம் முதலியவற்றின் கலப்புள்ள நீரை மட்டும் எவ்விதத்திலும் சுத்தம் செய்ய முடியாததால் அதை எப்போதுமே உபயோகிக்கக் கூடாது.

கரும்புச்சாற்றின் குணம் —

इक्षो रसो गुरुः स्निग्धो बृंहणः कफमूत्रकृत् ।
वृष्यः शीतोऽस्रपित्तघ्नः स्वादुपाकरसः सरः ॥ — अष्टाङ्गहृदयम्

கரும்பின் சாறு — எளிதில் சீரணமாகக்கூடியதல்ல. உடம்பைத் தேற்றுகிறது. கபம், சிறுநீர் இவற்றை உண்டாக்குகிறது, ஆண்மையை வளர்க்கிறது. குளிர்மையானது. இரத்த பித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்கால்புகள் இவற்றின் வழியாக இரத்தம் கசியுதல்) என்னும் நோயைப் போக்குகிறது. இனிப்புச்சுவையை உடையது. மலக்கட்டைப் போக்குகிறது. — அஷ்டாங்கஹிருதயம்

பசுப்பாலின் குணம் —

.... गव्यन्तु जीवनीयं रसायनम् ।
क्षतक्षीणहितं मेध्यं बल्यं स्तन्यकरं सरम् ॥

श्रमभ्रममदालक्ष्मीश्वासकासातितृट्क्षुधः ।
जीर्णज्वरं मूत्रकृच्छ्रं रक्तपित्तं च नाशयेत् ॥ — अष्टाङ्गसंग्रहः

பசுவின் பால் — பிராண சக்தியை வளர்க்கிறது. நரையைப் போக்கி நோயற்ற நடு வயதை நிலை நிறுத்துகிறது. இரத்தத்துடன் கூடிய இருமல் உள்ளவனுக்கும், க்ஷயரோக முள்ளவனுக்கும் இதமானது. தாரண சக்தியை வளர்க்கிறது. உடம்புக்கு வன்மையைக் கொடுக்கிறது, முலைப்பாலை உண்டாக்குகிறது, மலச்சிக்கலை நீக்குகிறது. ஓய்ச்சல், தலை சுற்றல், வெறி, அலக்ஷிமி, சுவாசம் (Asthma) இருமல், அதிகநாவறட்சி, அதிகமானபசி, நாட்பட்டசுரம், நீர்ச்சுருக்கு இரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்கால்புகள், இவைகளின் வழியாக இரத்தம் கசிதல்) இவைகளைப்போக்குகிறது. — அஷ்டாங்க ஸங்கிரஹம்

அப்பொழுதே கறந்த பாலின் குணம் —

धारोष्णं गोपयो बल्यं लघु शीतं सुधासमम् ।
दीपनं च त्रिदोषघ्नं ... ... ॥ — भावप्रकाशः

அப்பொழுதே கறந்த பாலைக் கறந்த சூடு ஆறுவதற்கு முன்பே சாப்பிடுவது உடம்பைத் தேற்றுகிறது, எளிதில் சீரணமாகக்கூடியது, குளிர்ச்சியானது, அமுதத்திற்கொப்பானது பசியைத் தூண்டுகிறது. மூன்று தோஷங்களையும் குறைக்கிறது. — பாவப்பிரகாசம்

காலையில் கறந்த பாலின் குணம் —

प्रायः प्राभातिकं क्षीरं गुरु विष्टम्भि शीतलम् ।
रात्र्याः सोमगुणत्वाच्च व्यायामाभावतस्तथा ॥ — सुश्रुतसंहिता

இரவு குளிர்ச்சியாக இருப்பதாலும், பசுவிற்கு அலைச்சல் இல்லாம லிருப்பதாலும் காலையில் கறந்த பால் எளிதில் சீரணமாகக்கூடியதல்ல மலச் சிக்கலை உண்டாக்கும். குளிர்ச்சியானது. — ஸுச்ருதஸம்ஹிதா

மாலையில் கறந்த பாலின் குணம் —

दिवाकराभितप्तानां व्यायामानिलसेवनात् ।
वातानुलोमि श्रान्तिघ्नं चक्षुष्यं चापराह्णिकम् ॥ — सुश्रुतसंहिता

பசு சூரிய வெப்பத்தை அடைவதாலும், அலைச்சல், காற்று இவற்றை அடைவதாலும் மாலையில் கறந்த பால் வாயுவைக் கண்டிக்கிறது. களைப்பை நீக்குகிறது. கண்களுக்கு நலன் செய்யும். — ஸுச்ருதஸம்ஹிதா

பால் ஆடையின் குணம் —

सन्तानिका गुरुः शीता वृष्या पित्तास्रवातनुत् । — योगरत्नाकरः

பாலின் ஆடை — எளிதில் சீரணமாகாது. ஆண்மையைப் பெருக்கும் இரத்தபித்தம் (கண், காது, வாய், மூக்கு, மலத்வாரங்கள், மயிர்க்கால்புகள் இவற்றின் வழியாக இரத்தம் கசிதல்) வாயு இவற்றைப் போக்குகிறது. — யோகரத்நாகரம்

பால் கெடாத நிலை —

अक्वथितं दशघटिकाः क्वथितं द्विगुणाश्च ताः पयः पथ्यम् । — योगरत्नाकरः

காய்ச்சப்படாத பால் பத்து நாழிகை வரையில் இதமானது. காய்ச்சப்பட்டபால் இருபது நாழிகை வரையிலும் இதமானது. —யோகரத்நாகரம்

பசுவின் தயிரின் குணம் —

रोचनं दीपनं वृष्यं स्नेहनं बलवर्धनम् ।
पाकेऽम्लमुष्णं वातघ्नं मङ्गल्यं बृंहणं दधि ॥

पीनसे चातिसारे च शीतके विषमज्वरे ।
अरुचौ मूत्रकृच्छ्रे च कार्श्ये च दधि शस्यते ॥ — चरकसंहिता

பசுவின் — தயிர் ருசியை உண்டுபண்ணுகிறது, பசித்தீயைத் தூண்டு கிறது. ஆண்மையை வளர்க்கிறது, உடம்பில் நெய்ப்பசையை உண்டு

பண்ணுகிறது, வன்மையைக் கொடுக்கிறது, சீரணமாகிய பின்பு புளிப்புச் சுவை உள்ளது, வெப்பத்தை உண்டாக்குறகிது, மங்களகரமானது, உடம்பைத் தேற்றுகிறது. ஜலதோஷம், பேதி, குளிருடன் உண்டாகும் முறைசுரம், ருசியின்மை, நீர்ச்சுருக்கு, உடர்பு இளைப்பு இவற்றிற்குச் சிறந்தது. — சரகஸம்ஹிதா

தயிரை உபயோகிப்பதில் நியமம் —

न नक्तं दधि भुञ्जीत न चाप्यघृतशर्करम् ।
नामुद्गयूषं नाक्षौद्रं नोष्णं नामलकैर्विना ॥ — चरकसंहिता

.... दधि भुञ्जीत न च निर्लवणं तथा । —भावप्रकाशः

தயிரை இரவில் உபயோகிக்கக்கூடாது இதை நெய், சர்க்கரை, பயத்தம் கஞ்சி, தேன், நெல்லிக்காய் இவற்றில் ஏதேனும் ஒன்ருேடு சேர்க்காமலும் சுடவைத்தும், உபயோகிக்கக்கூடாது. — சரகஸம்ஹிதா

அவ்வாறே தயிரை உப்புடன் சேர்க்காமலும் உபயோகிக்கக்கூடாது. — பாவப்பிரகாசம்

தயிரை உபயோகிக்கத் தகாத நிலை —

शरद्ग्रीष्मवसन्तेषु प्रायशो दधि गर्हितम् ।
रक्तपित्तकफोत्थेषु विकारेष्वहितं च तत् ॥ — चरकसंहिता

தயிரை சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை இந்த மாதங்களிலும், இரத்தம், பித்தம், கபம் இவற்றின் சம்பந்தமான நோய் களிலும் உபயோகிக்கக்கூடாது. — சரகஸம்ஹிதா

தயிர்த் தெளிவின் குணம் —

तद्वन्मस्तु सरं स्रोतःशोधि विष्टम्भजिल्लघु । — अष्टाङ्गसंग्रहः

தயிரின் தெளிவு—மலச்சிக்கலை நீக்குகிறது. இரத்தம் முதலிய ஓடும் குழாய்களைச் சுத்தம் செய்கிறது. அசீரணத்தைப் போக்குகிறது. எளிதில் சீரணமாகக்கூடியது. —அஷ்டாங்கஸங்கிரஹம்

பசு மோரின் குணம் —

तक्रं लघु कषायाम्लं दीपनं कफवातजित् ।
शोफोदरार्शोग्रहणीदोषमूत्रग्रहारुचीः ॥

गुल्मप्लीहघृतव्यापद्गरपाण्ड्वामयान् जयेत् । — अष्टाङ्गसंग्रहः

பசுவின் மோர்—எளிதில் சீரணமாகும். துவர்ப்பு, புளிப்பு, இந்தச் சுவைகளைக்கொண்டது. பசித்தீயைத் தூண்டுகிறது. கபம், வாயு, வீக்கம் வயிற்றில் நீர்க்கோவை, மூலம், நாள்பட்டபேதி, சிறுநீர்த்தடை, ருசியின்மை வயிற்றிலுண்டாகும் கட்டி, ஈரல் கட்டி, நெய் சீரணமாகாத நிலை, இடுவிஷம், சோகை இவற்றைப் போக்குகிறது. — அஷ்டாங்க ஸங்கிரஹம்

மோர் தகாத நிலை —

नैव तक्रं क्षते दद्यान्नोष्णकाले न दुर्बले ।
न मूर्च्छाभ्रमदाहेषु न रोगे रक्तपैत्तिके ॥ — अष्टाङ्गसंग्रहः

விரணம் உள்ளவர்களுக்கும் கோடை காலத்திலும் வலிமையற்றவனுக்கும் மோரைப் பயன்படுத்துவது தகாது. மயக்கம், தலைச்சுற்றல், எரிச்சல், ரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க் காம்புகள் இவற்றின் வழியாக இரத்தம் கசிதல்) இந்த நோய்களிலும் மோர் ஏற்றதல்ல. — அஷ்டாங்கஸங்கிரஹம்

பசு வெண்ணெயின் குணம் —

नवनीतं हितं गव्यं वृष्यं वर्णबलाग्निकृत् ।
सङ्ग्राहि वातपित्तासृक्क्षयार्शोऽर्दितकासहृत् ॥ — भावप्रकाशः

பசுவின் வெண்ணெய் இதமானது. ஆண்மையை வளர்க்கிறது. நிறம் வலு, பசித்தீ இவற்றை உண்டாக்குகிறது. மலத்தைக்கட்டுகிறது. வாயு, பித்தம், இரத்த தோஷம், க்ஷயம், மூலநோய், முகம் கோணலாகிவிடும் வாத நோய், இருமல் இவற்றைக் கண்டிக்கிறது. —பாவப்பிரகாசம்

பாலினின்று எடுக்கப்பட்ட வெண்ணெயின் குணம் —

क्षीरोद्भवं तु सङ्ग्राहि रक्तपित्ताक्षिरोगजित् । — अष्टाङ्गसंग्रहः

பாலைக்கடைந்து எடுக்கப்பட்ட வெண்ணெய் மலத்தைக்கட்டும் இரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க் காம்புகள், இவற்றின் வழியாக இரத்தம் கசிதல்) கண்நோய் இவற்றைப் போக்குகிறது. — அஷ்டாங்கஸங்கிரஹம்

பசு நெய்யின் குணம் —

शस्तं धीस्मृतिमेधाग्निबलायुःशुक्रचक्षुषाम् ।
बालवृद्धप्रजाकान्तिसौकुमार्यस्वरार्थिनाम् ॥

क्षतक्षीणपरीसर्पशस्त्राग्निग्लपितात्मनाम् ।

वातपित्तविषोन्मादशोषालक्ष्मीज्वरापहम् ॥

स्नेहानामुत्तमं शीतं वयसः स्थापनं घृतम् ॥ — अष्टाङ्गसंग्रहः

பசு நெய்—புத்தி, ஞாபகசக்தி, தாரணைசக்தி, பசித்தீ, ஆயுள், விந்து இவைகளை வளர்க்கிறது. கண்களுக்கு நலம் செய்யும், சிறுவர்களுக்கும், வயதானவர்களுக்கும், சந்தான விருத்தியை விரும்புகிறவர்களுக்கும் உடம்புக்கு ஒளியையும், அழகையும் விரும்புபவர்களுக்கும், நல்ல குரலை விரும்புபவர்களுக்கும், இரத்தத்துடன் கூடிய இருமலால் இளைத்தவர்களுக்கும் விஸர்ப்பம் (இரத்த தோஷத்தினுல் அக்கினியைப்போல் தோலில் பரவும் இயல்புடைய நோய்) உள்ளவர்களுக்கும், சக்திபோன்ற ஆயுதம், நெருப்பு இவைகளால் உடல் வாட்டமடைந்தவர்களுக்கும், இதமானது. வாயு, பித்தம், கபம், விஷம், பைத்தியம், க்ஷயரோகம், அலக்ஷ்மி, சுரம் இவைகளைப் போக்குகிறது. ஸ்நேஹத் திரவ்பங்களுக்குள் சிறந்தது. குளுமையானது. நோயற்ற நடுவயதை நிலை நிறுத்துகிறது.

— அஷ்டாங்கஸங்கிரஹம்

பத்து வருடங்கள் பழையதாகிய பசு நெய்யின் குணம் —

मदापस्मारमूर्च्छाविशिरःकर्णाक्षियोनिजान् ।
पुराणं जयति व्याधीन् व्रणशोधनरोपणम् ॥

पूर्वोक्तांश्चाधिकान् कुर्याद्गुणांस्तदमृतोपमम् । — अष्टाङ्गसंग्रहः
पुराणं तिमिरश्वासपीनसज्वरकासनुत् ।
मूर्छाकुष्ठविषोन्मादग्रहापस्मारनाशनम् ॥ — सुश्रुतसंहिता

பத்து வருடங்கள் பழையதாகிய பசு நெய்—வெறி; வலிப்பு; மூர்ச்சை; மண்டை, காது, கண், கருப்பை ஆகியவற்றிற்குச் சம்பந்தமான நோய்கள் இவற்றைப் போக்குகிறது. விரணங்களைச் சுத்தமாகச் செய்கிறது. ஆற்றுகிறது. பழகிய நெய்யானது முன் கூறிய புதிய நெய்க்குள்ள குணங்களையும் அதிகமாகச் செய்கிறது. இது அமிருதத்திற்கு ஒப்பானது.

— அஷ்டாங்கஸங்கிரஹம்

பத்து வருடங்கள் பழையதாகிய பசு நெய்—திமிரம் என்னும் கண்நோய் (கண் பார்வை முற்றிலும் இல்லாமல் போவது), சுவாசம் (Asthma), ஜலதோஷம், சுரம், இருமல், மூர்ச்சை, குஷ்டம், விஷதோஷம், பைத்தியம், கிரகதோஷம், வலிப்பு இவைகளைப் போக்குகிறது.

— ஸுச்ருதஸம்ஹிதா

நூற்றுப் பதினேரு வருடங்கள் பழகிய பசு நெய்யின் குணம்—

राकादशशतं चैव वत्सरानुषितं घृतम् ।
रक्षोघ्नं कुम्भसर्पिः स्यात् .... ॥ — सुश्रुतसंहिता

நூற்றுப் பதினேரு வருடங்கள் பழையதாகிய நெய்-கிரகதோஷத்தைப் போக்குகிறது இதற்கு 'கும்பஸர்பி:' என்று பெயர். — ஸுச்ருதஸம்ஹிதா

நூற்றுப் பதினேரு வருடங்களுக்கும் மேல்பட்டுப் பழையதாகிய பசு நெய்யின் குணம்—

... ... परतस्तु महाघृतम् ॥

पेयं महाघृतं भूतैः कफघ्नं पवनाधिकैः ।
बल्यं पवित्रं मेध्यं च विशेषात्तिमिरापहम् ॥

सर्वभूतहरं चैव घृतमेतत्प्रशस्यते ॥ — सुश्रुतसंहिता

நூற்றுப் பதினேரு வருடங்களுக்கும் மேல்பட்டுப் பழையதாகிய நெய் மஹாகிருதம் எனப்படும். இது கபத்தைப் போக்குகிறது. வாயு அதிகமாக உள்ளவர்களால் உட்கொள்ளத்தக்கது. இது வன்மையை அளிக்கிறது. பவித்ரமானது. தாரணைசக்தியை வளர்க்கிறது. திமிரம் (முற்றிலும் கண் பார்வை இல்லாமல் போவது), எல்லா கிரஹரோகங்கள் இவற்றை நீக்குகிறது. இந்த நெய் மிகவும் சிறந்தது. — ஸுச்ருதஸம்ஹிதா

எருமைப்பாலின் குணம் —

माहिषं मधुरं गव्यात्स्निग्धं शुक्रकरं गुरु ।
निद्राकरमभिष्यन्दि क्षुधाधिक्यहरं हिमम् ॥ — भावप्रकाशः

எருமைப்பால்--இனிப்பானது. பசுவின்பாலைவிட அதிகமாக நெய்ப்புடையது. ஆண்மையை வளர்க்கிறது. எளிதில் சீரணமாகக்கூடியதல்ல. தூக்கம், கபம் இவற்றை உண்டுபண்ணுகிறது. மிகுந்த பசியைப் போக்குகிறது. குளிர்ச்சியானது. — பாவப்பிரகாசம்

எருமைத் தயிரின் குணம்—

विपाके मधुरं वृष्यं वातपित्तप्रसादनम् ।
बलासवर्धनं स्निग्धं विज्ञेयाद्दधि माहिषम् ॥ — सुश्रुतसंहिता

எருமையின் தயிர்—இனிப்பானது. ஆண்மையை வளர்க்கும். வாயு பித்தம் இவற்றைக் குறைக்கும். கபத்தை உண்டாக்கும். மிகுதியாக நெய்ப்புடையது. —ஸுச்ருதஸம்ஹிதா

எருமை வெண்ணையின் குணம்—

नवनीतं महिष्यास्तु वातश्लेष्मकरं गुरु ।
दाहपित्तश्रमहरं मेदःशुक्रविवर्धनम् ॥ — भावप्रकाशः

எருமையின் வெண்ணெய்—வாயு, கபம் இவற்றை உண்டுபண்ணும். எளிதில் ஜீரணமாகக்கூடியதல்ல. எரிச்சல், பித்தம், ஓய்ச்சல் இவற்றை நீக்கும். கொழுப்பு, விந்து இவற்றை உண்டாக்கும். — பாவப்பிரகாசம்

எருமை நெய்யின் குணம்—

माहिषं तु घृतं स्वादु पित्तरक्तानिलापहम् ।
शीतलं श्लेष्मलं वृष्यं गुरु स्वादु विपच्यते ॥ — भावप्रकाशः

எருமை நெய்-இனிப்பானது. பித்தம், இரத்தம், வாயு இவற்றிற்குச் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்கும். குளிர்ச்சியானது. கபத்தை அதிகப்படுத்தும். ஆண்மையை வளர்க்கும். எளிதில் ஜீர்ணமாகக்கூடியது அல்ல. — பாவப்பிரகாசம்

வெள்ளாட்டுப்பாலின் குணம்:—

छागं कषायमधुरं शीतं ग्राहि पयो लघु ।
रक्तपित्तातिसारघ्नं क्षयकासज्वरापहम् ॥ — चरकसंहिता

